[illegible]

V1' No. 25 21 June 1928

'8L
ממ2ע, N28KN
N28.1.25
189008

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

20 NOV 1928
MADRAS

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 1.] 1928௵ ஜூன்மீ 21௳ [No. 25.

பொருளடக்கம்.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 481 |
| 2. | காந்திமதி (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L. | 483 |
| 3. | சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L. | 485 |
| 4. | தமிழ்ப் பாடம் | 488 |
| 5. | சொல்லாட்டம் | 490 |
| 6. | அகத்திய முனிவர் R. முத்தையர் | 491 |
| 7. | கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A., B. L. | 493 |
| 8. | பழமுதிர்சோலை 'சுபரி' | 496 |
| 9. | வர்த்தமானம் | 499 |

## கலா நிலயம்.

### கொளுத்தலும் ஒன்று காப்பதும் ஒன்று.

கட்சித்தலைவர்களா யிருப்பவர் தேர்தல் காலங்களிலும் தத்தமக்குரிய பத்திரிகைகள் வாயிலாகவும் விளம்புவன பலவேனும், அரசியல் நடக்கையில் இந்நாட்டில் வேறு வேறு பேரோடு விவகரிக்கின்ற கட்சிகள் செய்கின்ற காரியம் எவையென நடுநிலை நின்று நோக்குவோர் யாவரும் திகைப்பேயடைவர். இன்றைக்கு நாம் இக்கட்சிகளின் முதிர்ந்த பயனைப் காண்பதெல்லாம் மாறி மாறி மூன்றுபேர் மந்திரிகள் ஆவதல்லாது பிறிதொன்று கண்டேம் எனக் கூறவல்லவர் பார்வையின் கூர்மை மிகுந்தவராக வேனும், மற்று ஒன்றும் காண இயலாத நேத்திரத்தவராக வேனும் இருத்தல் வேண்டும்.

கட்சிக்குக்கட்சி கொள்கையில் பேதமில்லை யென்று அவரவர்களே சொல்லிவிடுகின்றார்கள். ஆதலால் அதுபற்றி நாம் ஆராயவேண்டா. உண்மையும் அதுவே. ஏனெனில் ஒரு கட்சிக்கும் ஒரு கொள்கையும் இல்லை. எனின், பேதமும் இல்லாதது தர்க்க நூலிற்கிணங்கிய முடிவேயாகும். கொள்கையில் வேறுபாடு இல்லையென்றும் இவர்தம்முள்முறையிற்றான் சிறிது மாறுபாடு உண்டென்றும் கூறுவர். மேல் பார்வையாகப் பார்க்கின்றபோது இதனிற் பெரிதும் உண்மை இருப்பதுபோல் தோன்றும். சொல்லால் முழக்குவதால் சுழன்றெழுந்து படிந்துள புழுதியைச் சற்றே விலக்கி நோக்குமிடத்து, முறையில் மாறுபாடுளதென்னும் இதுவும் நேரிதல்ல வென்றே யாவரும் ஐயமின்றிக் கொள்வர். இல்லாமை என்னுங் காரணத்தால் எக்கட்சிக்கும் கொள்கை ஒன்றாயது போன்றே முறைகளும் ஒருவகையனவே அந்தத்தில் ஆகி அமைகின்றன.

யாம் கூறிய இக்கூற்றினைப் பலர் எளிதில் ஏற்றுக் கொள்ளார் என்பதை யறிவோம். எனினும், எப்பொருட்கும் மெய்ப்பொருள் காணவேண்டு மென்னும் முயற்சியால் இது செப்புகின்றோமாதலால் ஒரு சிலர் எம்மோடு இங்குத் தொடர்ந்து உண்மை போமளவு தாமும் உடன் வருவர் என்று மதிக்க இடமுளது.

'கொள்கை' என்று நாம் இங்குக் குறிப்பது, விவகாரத்தில் வழங்குகின்ற சில வாசகங்களையல்ல. குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்றலே வர்த்தகக் கொள்கை யென்றும்; பொது ஜனங்களின் பிரதிநிதிகளின் அநுமதி யின்றி வரிவிதிப்பது கொள்ளைக்குநேர், என்பது அரசியல் கொள்கை யென்றும்; சத்தியத்திற் சிறந்ததோர் சாதனமில்லை, என்னுமிது நீதிநெறிக் கொள்கை யென்றும், கூறுகின்ற இவையனைய யாவும் கொள்கைகளாகா. கொண்ட கொள்கையை நிறைவேற்றி வைக்குங் கருவிகள் அவை. சிற்பியின் கையில்இருக்கும் கூரிய உளி அவன் கொள்கையன்று. அக்கருவிகொண்டு யாது செய்வது தனக்கு முறை யென்று மதிக்கின்றானோ, அதுவே கொள்கை யெனப்படும். உளி

யைக்கொண்டு சித்திரம் செதுக்குதல் வேண்டும் எனக் கொள்வானாயின், அப்பொழுது ஒரு கொள்கையை உடையவனாகின்றான், இருக்கின்ற சித்திரத்தைச் சிதைப்பதற்கே கூரிய உளி இருக்கின்றதென்பதும் கொள்கைதான்.

ஆதலின் விவகார வசதிகளை நாம் கொள்கை என அழைத்தல் நேரிதன்று. தன்வரையிலோ குடிமக்களுடன் சேர்ந்தோ பொதுஜனத்தோடு கலந்தோ வாழ்கின்ற வாழ்க்கையில் ஒருவன் எவ்வாறு அமைதல் வேண்டுமென நிச்சயம் செய்துளார்க்கு அந்நிச்சயம் ஒன்றே கொள்கையாம். ஜீவாதாரமாகிய இதனைப்பற்றி ஒருபோதும் நினையாதார் கொள்கை சில தமக்குண்டு எனக் கூறுங்கால் அவரைக்கண்டு இரங்குவதன்றி வேறு யாது செய்ய இயலும். வாழ்நாளின் வேளாண்மை எக்கதிர் ஈனல் வேண்டும் என்றவோர் கொள்கையை முன்னிட்டு விவகரிக்கும் கட்சி ஒன்றுளதாயின் அது ஒரு கொள்கையைக் கடைபிடித்து நடப்பதாம். மற்றவெலாம் சில சொற்களைச் சிதறிச்சிதறி நடிப்பனவே. பிறந்திருந்து யாது செய்கின்றோம் என்பது அறியோம். இறந்து சென்று யாது செய்வோம் என்பதும் அறியோம். எனின், இருக்க முயன்றாலென்! இறக்க முயன்றாலென்! வர்த்தகம் செய்யுமுன் அவ் வர்த்தகத்தால் வரும் ஊதியம் நம் வாழ்க்கையின் கொள்கையை எவ்விதத்தில் நிறைவேற்றி வைக்க உதவும் என்று துணிந்தவர் உளரோ! வரி இறுத்தலும் மறுத்தலும் வாழ்வின் கொள்கைக்கு எவ்வித இடையூறாயினும் துணையாயினும் புரியும்எனக்கூறுவார்உளரோ! சத்தியம் சிறந்த சாதனமாயின் அது வாழ்வினில் சாதிப்பது எதனை யெனச் செப்புவார் உளரோ! உளராயின் அவர்தாம் கொள்கைகள் உடையவர்.

கொள்கையிலாதார் கருவிகளைக் கையாள்வது தமக்கும் பிறர்க்கும் ஆபத்திற்கிடமாகும். உளியைக் கையிற்கொண்டு அதற்குக் கூர்மை ஊட்டி வருதலே சிற்பம் என்று எண்ணுபவன் தன் விரலில் ஒன்றிரண்டு செகுப்பதோடு அயலார்க்கும் புண் சில செய்பலாமேயன்றி அவன் யாதும் ஆக்குதற்குரியவனல்லன். உளியைப்பற்றி இவனுக்கு மூலமாய கொள்கை யாதொன்றும் இல்லாமையே இத்தீமைக்குக் காரணம். அதுவன்றி, உளிகொண்டு இருப்பன யாவற்றையும் பிளந்தெறிவதே முறை எனச்செய்வானாயினும் அன்னான் ஓர் கொள்கையையுடையவன். அவன் அழிக்கின்றவனாயினும் நாமவனை ஏற்றுக்கொள்ளலாம். அவனால் பெரிதும் தீங்கு விளையாது. ஏனெனில் "அழிக்கின்றேன்" என்று சொல்லி வருகின்றானாகையால் அவனைச் சுற்றி நின்று கொண்டாடுவார் இலராகச் சிறிது போதில் அந்நோக்கம் அவனைவிட்டுத் தானாகவே போய்விடும். ஆக்கும் ஊக்கம் ஒன்றே மேன்மேலும் வளர்வது. அழித்தலில் தலைப்பட்ட ஊக்கமோ தேய்ந்து தேய்ந்து தானே அழிந்திடும். தேயாது போயினும் இவன் கையிலிருந்து உளியைப் பிடுங்கியெறிந்து மற்றவர் காவல் செய்வர்.

இதற்கு மாறாக, உளியினால் யாதோ யான்செய்ய இருக்கின்றேன் என்பவனுக்கு, வாழ்க்கையின் கொள்கை யில்லாததால், செய்யப்போவது இதுவென்று தெரியாமல் கிடக்கின்றது. தான் எது செய்யப் போகின்றான் என்று தனக்குத் தெரியாதென்று அவனுக்குத் தெரியாததுவே மிக்க பரிதாபத்திற்கு இடமாயிருக்கிறது. பரிதாபத்திற்கு மாத்திரம் இடமாயிருந்தால் போதுமே, ஆபத்திற்கும் அடிப்படையாயிருப்பது அது. ஏனெனில், அவன் இடைவிடாமல் வன்மையோடு சொல்வதைக் கொண்டு அவன் யாதோ வொன்று செய்யத்தான் போகின்றானென்று கேட்கின்ற மாக்களில் பகுத்தறிவற்றவர் பலர் அவனுக்கு உற்சாகம் ஊட்டித் தாமும் உற்சாகங்கொண்டு, ஆளுக்கொரு உளியைக் கையிலேந்தி வீசத்தலைப்படுகின்றனர். இவ்வீச்சிலே பட்ட பொருளெல்லாம் புண்பட்டுப் போகின்றன. அவர்தம் உடம்பிலும் குருதிபடக் காணலாம். ஆக்குகின்றோம் ஆக்குகின்றோம்' என்றவர் சொல்லிச் செய்வன எல்லாம் அழிப்பதற்கே அழிப்பதற்கே ஏற்றனவாய் முடிகின்றன. 'இவ்வழிவுதான் ஆக்கம்' என்னும் நினைவில் மூழ்குகின்றனர். வாழ்நாள் அமைப்பைப் பற்றியோர் கொள்கை யில்லாது கருவிகளைக் கை வீசுவதால் வரும் கேடு இது.

மனுதர்ம சாஸ்திரத்தைக் கொளுத்தக் கொளுத்தத் தர்மம் வளர்ந்து வளர்ந்து வரும் என்று விகரிப்பார்தம் கருமம் நிகழ்கின்ற வாறு இவ்வாறு. பாவம், அவர் மூடப்பகையினால் இவ்வாறு செய்கின்றனர் என வெண்ணி அவர்களை நிந்திக்க வேண்டா. மநுநூல் எழுதிப் பெறும் பெருமை இலரேனும் கொளுத்திப் புகழ் பெற நினைத்தனர் என்பதும் அபவாதமாம். சமயக் கடவுளரையும் குரவரையும் அவர் சிதைப்பதற்கு மாறாகச் சிலர் எதிர்நின்று போர்புரிய வேண்டு மென்பர். போரிற்கும் பாத்திரமல்லாப் பேதைகளைப் போக விடுதலே ஆன்றோர்க்கழகு. இவ்வாறு போர் தொடுக்க விரும்புவோரும், தமக்கு வாழ்க்கைக் கொள்கை ஒன்றிருந்து அது நிறைவேறுதற்கு மநுநூலும் தேவாரமும் நிலைக்க வேண்டுமென நினைப்பாராயின் எல்லாப் படியாலும் போர் செய்க. இல்லையெனில் மநுநூல் கொளுத்துவது எத்துணைக் கருத்தற்ற செய்கையோ அத்துணைக் கருத்தற்ற செய்கை அதனைக்காக்க முயல்வதும் ஆகும்.

இங்கு நாம் கூறியதை மனுநூல் கொளுத்திப் புதைத்து ஈமக்கடன் செய்யும் கட்சியினர்க்கு மாத்திரம் பொருத்தமுடைத்தென்று எண்ணாது, மற்று அரசியல் சமயம் ஆசாரம் முதலியவற்றை ஆதாரமாகக்கொண்டு நிலவும் எல்லாக் கட்சிகளுக்கும் பொருத்தி ஆராயுமிடத்து எய்துகின்ற முடிவு இதுவேயாகும். 'அழிப்பதே ஆக்கம்' என்ற முறை யாவற்றிற்கும் பொதுவா யிருத்தலால் முறைகளிலும் வேறுபாடில்லை யென்று முன்னர்க் கூறினோம்.



# காந்திமதி என்னும் காந்தாரநாட்டுக் கட்டழகி.

(464-வது பக்கத் தொடர்ச்சி)

## 22. கழுத்து மறந்த கயவர்.

காந்திமதியைச் சந்திரசேகரருடன் சிகரவிலாஸத்தில் விட்டுவிட்டுக் கருணாகரரைப் பின்பற்றிச் சென்று பெருங்குன்றத்தில் நடந்தவைகளைப் பார்த்தோம். இனி, சித்ராங்கன் நமது பார்வைக்குட்பட்டு உலவுவானாவான். எனினும் இரதி பௌர்ணமியன்று வேந்தனவையில் வெகுண்டகன்ற மணிவாளனிற்கு உற்றதை முதலிற் சொல்ல வேண்டிய தவசியமாகின்றது.

காஷ்மீரக் காவலனுடன் கலந்துகொண்டு காந்தாரத்தைக் காட்டிக்கொடுக்கக் கூடியவனாயினும், தனது புதல்வியைச் சித்ராங்கன் இப்பொழுதும் மணங்கொள்ளலாகுமென மன்னவன் குறிப்புணர்த்திய சிறு சொற்களால் மனந்தேறிய மணிவாளன், அரசனளித்த வாக்கை நிறைவேற்றுமாறு செய்வதற்குக் காஷ்மீரத்தின்மீது தானே படையெடுத்துச் சென்று, போர்வென்று அத்தலைவனைச் சிறையாக்கி விச்வகேசரியின் முன்னும், தனது இராஜபக்தியைப் பழித்த விராடபத்ரன் கஜேந்திரஸிம்மன் ஆயினோர் முன்னும் கொண்டுவந்து நிறுத்துவது தக்க நிமித்தமா யிருக்குமென நிச்சயித்துத் தன்னாடு மீண்டடைந்தான். ஊரோ கலக்கமும் குழப்பமுமாயிருந்தது. மணிவாளன் தன் கோட்டையைவிட்டு இரத்தினபுரிக்கு முன் புறப்பட்ட அந்நாள்முதல் மாலினியைக் கன்னிமாடத்திலும் மற்றெங்கும் காணவில்லை என்று இயம்பினர். என் செய்வான் பாவம், மணிவாளன். எண்ணிய எண்ணமெல்லாம் வீணாயிற்றென ஏங்கினான். தானும் தன் பரிஜனங்களும் படைவீரர்களும் நாடெங்குந் தேடாத விடமில்லை. மாலினியைக் கண்டிலர், அவள் மறைந்ததற்குக் காஷ்மீரத்தவனே காரணமாயிருத்தல் வேண்டும் என்னுமோர் சந்தேகம் மணிவாளனிற்கு உண்டாயிற்று. நங்கையின் காதலை நாடியதனாலோ அல்லது தனது நட்பை வேண்டியோ காஷ்மீரன் மாலினியைப் பலகாலமாய் மணம் வினவியுள்ளானாகையால் தான் இல்லாத சமயம்பார்த்து அவளையவன் தூக்கிச் சென்றிருப்பதற்கு இடமுண்டென எண்ணினான். வந்ததுகோபம். அவ்வளவில் படையுடன் புரண்டெழுந்து காஷ்மீரத்தின் தலைநகராகிய ஸ்ரீநகரின் மதிலைச் சூழ்ந்து கொண்டான். கடும்போர் நடந்தது. ஆசைக்கேற்றஆற்றலிலாக் காஷ்மீரவேந்தனே தோல்வியுற்றான். போர்தொலைந்து சிறைப்பட்ட காஷ்மீரக் காவலன் "மாலினியைப்பற்றி யாதும் அறியேன்" எனக் கத்தி நுனியிலும் சத்தியஞ் செய்துவிட்டான். மணிவாளனும் பெண்ணைத்தான் இழந்தாலும் புகழேனும் நிற்க வெண்ணி, விச்வகேசரியின் வெற்றிப்பதாகையைக் கொத்தளத்தி லுயர்த்தி நாட்டி, அவ்வரசனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு, தனது சேனை பரிவாரங்கள் புடைசூழ இரத்தினபுரி நோக்கி வழிக்கொள்வானாயினான். காஷ்மீரத்தவனது ஆட்கள் ஆயிரம்பேரும் உடன் வந்தனர். பெருங்குன்றத் தலைவர் இருவரும் உய்வர் யாரெனப்பொருதற்கு நியமித்திருந்த விஜயதசமி தினத்திற்கு முதல்நாள் மணிவாளனும் இரத்தின புரிக்குப் பத்துமைல் தூரத்தில் வந்து சேர்ந்தான். அவன் அன்றிரவு தங்குவதற்கு எண்ணியிருந்த இடம் சித்ராங்கனது 'சித்ரமோகன' மாளிகைக்கு வெகு அருகே அமைந்தது. அவ்விடத்தில் படமாடம் முதலிய நிறுவுதற்கு முயலுங்கால் தூரத்தில் மற்றொரு சைனியம் விரைந்துவரக் கண்டனர். அது கஜேந்திரஸிம்மனது சைனியம்.

மந்திராலோசனையின் முடிவாகக் கஜேந்திரஸிம்மன் படையெடுத்துச் சென்று காஷ்மீரக் காவலனது இறுமாப்பை அடக்கிவருவதாகக் கூறி யகன்றதுமுதல் யுத்தத்திற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்துவந்தான். ஆனால், விராடபத்ரனுடன் சேர்ந்து மதத்தின் ஆட்சியில் அரசன் மடாதிபதிக்குக் கொடுத்த புதிய அதிகாரத்தால் சனங்களது மனநிலை பெரிதும் அலைப்புண்டிருத்தலால் குடிக்கலகம் நேருமோவெனப் பயந்து, அச்சமயத்தில் கஜேந்திரஸிம்மனது காவலை அரசன் வேண்டி அவனைப் படையோடு தன்பதி வந்து வைகுமாறு செய்திருந்தான். இரண்டு மூன்று தினங்களுக்குமுன், விச்வகேசரி மடாதிபதிக்குக் கொடுத்திருந்த அதிகாரத்தை இனி நடத்தப்படா தென்று மறுவுத்தரவு கொடுத்துவிட்டான். முன்தூண்டிய விராடபத்ரனே அரசனை இவ்வாறு செய்யவைத்ததாகவுந் தெரியவருகின்றது. அவன் அது செய்ததற்குக் காரணம், வேறு எதுவாயிருந்தாலும், குடிகளின்பால் கருணையாலன்று என்பது மாத்திரம் திண்ணம். இதன்பின் அவன் கஜேந்திரஸிம்மனைக் கூப்பிட்டு, இனி இரத்தின புரிக்குக் காவல் அவசியமில்லையாகையால் உடனே புறப்பட்டுச் சேனையைக் காஷ்மீரத்தின்மீது செலுத்தக் கட்டளையிட்டான். விஜயதசமி கழிந்தபின் தான் போவதற்கு அநுமதி கொடுக்கும்படி கஜேந்திரஸிம்மன் எவ்வளவு வேண்டியும் விராடபத்ரன் இணங்கவில்லை. "அரசனது ஆணையை மறுப்பயோ" என விராடன் கடிந்துரைக்க, 'நான் இப்பொழுது இங்கிருப்பது இப்பாதகன் சூழ்ச்சி எதற்கோ பொருந்தவில்லை போலும், அதனாற்றானென்னைமுயன்றப்புறப் படுத்துகின்றான்,' என்று கஜேந்திரஸிம்மன் எண்ணினான். எனினும், அரசன் கைமுத்திரையிட்ட உத்திரவைக் கண்டபின் அவன் காலந்தாழ்வதற் கியலாது மறுநாள் படையுடன் புறப்படச் சம்மதித்தான்.

இன்னவாறு புறப்பட்ட கஜேந்திரஸிம்மன் மணிவாளனது சைனியத்தைச் சித்திரமோகன மாளிகைக்கெதிரில் கண்ணுற நேர்ந்தது. மணிவாளன் முன்னதாக ஒரு தூதனை அவன்பால் போக்கி விடயம் யாவையும் விளம்பச் சொன்னான். கஜேந்திரஸிம்மனை யடைந்த தூதன், மணிவாளன் காஷ்மீரமன்னனைச் சிறைபடுத்திக் கொணர்வதால் கஜேந்திரஸிம்மன் அங்குச் செல்ல வேண்டியதில்லை யென்று தெரிவிக்கவும் கஜேந்திரஸிம்மன் அதனை நம்பாது, "காஷ்மீர நாட்டை வெல்லுதற்கொத்த ஆற்றல் உன் மணிவாளனிற்கு ஏது! அந்தத் துரோகி என்னையே வஞ்சிக்கப் பார்க்கின்றான். அவன் பாதகன் என்பதை யான் அறியேனோ! இருவரையும் ஒருங்கே இன்றே மாய்ப்பன். அக்கயவனுடன் எனக்கு மறுவார்த்தை வேண்டா. அரைநாழிகைக்குள் போரிற்கு ஆயத்தமாகச் சொல். பலநாட் பகையை இம்மாலைக்காலம் முடிவதன்முன் முடிக்கின்றேன்," என எதிர் விளம்பி அனுப்பினான். இதைக் கேட்ட மணிவாளன் பொறுப்பானோ! "எனது வாய்மையையும் வீரத்தையும் பழிப்ப தொழியா அப்பதடியைக் கிழித் தெறிகின்றேன்" என்று வஞ்சினம் கூறி அரைநாழிக்குள்ளேயே போர் முனை வந்துநின்றான். இருதிறப்படையிலும் பாதி மடிந்ததேனும் யாவரும்,

வென்றிலர் தோற்றிலர். இருதிறத் தலைவரும் தனித்தெதிர்க்கக் கடும்போர் விளைந்தது. அத் தனிப்போரில் ஏற்றம் இறக்கம் இல்லாமலே கஜேந்திரஸிம்மனும் மணிவாளனும் வெகு நேரம் பொருதனர். வாளின் வீச்சு ஒவ்வொன்றும் மாற்றான் தலை கொய்ததெனக் கண்டவர் நினைக்கும்படி ஓச்சுவதும் அதனை மற்றவன் விரைவிற் றடுப்பதுமாய் நிகழ, அதற்கிடையில் நாம் முன் கலாநாதனின் மனையகத்தே விட்டுப்பிரிந்த பாண்மகள், "ஐயன்மீர், இச்செருவினைச் சற்றே நிறுத்துமின். ஐயகோ, யார் பொருட்டு இகல்கொண்டு பொருகின்றீரோ அவர் நமனார்க் கிரையாகும் தருணத்திலிருக்கின்றார். அவர் உய்யக்காண விரும்புவீரேல் இருவோரும் ஏகுமின், என்னுடன்" எனப் புலம்பினளாய் ஓடி வந்தாள். அக்குரலைக் கேட்ட மணிவாளன் 'திடுக்கிட்டு'க் கைவாளை நழுவவிட்டான். அச்சமயம் ஓங்கியிருந்த கஜேந்திரஸிம்மனின் கத்தி மணிவாளனது கழுத்தண்டை வந்தும் விட்டது. கண்டவர் இரண்டொருவர் கழிந்தது மணிவாளனினுயிரெனக் கலங்கிக் காக்கும் வகையறியாமல் மாழ்கினர். இறங்கிய வாளோ தானே இருதுண்டாய் உடைந்து விழ, இதுகாறும் பாண்மகளின் குரல்வந்த இடத்தைக் கருதியிருந்த மணிவாளன் திரும்பிப்பார்த்தான். இமைப்பொழுதில், மணிவாளனிற்குப்பின் வந்த காஷ்மீர வேந்தன் கத்திக்கும் கழுத்திற்கு மிடையே தன் கை வேலை நீட்டித் தடுத்த திறம் தெரியலாயிற்று. பாண்மகள் இங்குப் போர்க்களம் எய்த வந்த வரலாறு தொடருங்கால் சித்ராங்கனைச் சுற்றி இடை நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவும் தெரியவரும். மகோதரனையேவிக் கலாநாதனை அவன் கொல்ல முயன்றனன் என்னும் பழிச்சொல் அடங்கும்வரை, காவலிற்கு அனுப்பப்பட்ட நிலையில் அவனை விட்டு முன் பிரிந்தோம்.

விராடபத்திரன் வகுத்த சூழ்ச்சியால் பிரதாபதீரனது காவலிற் குட்பட்டிருந்த இளவரசன் தன் நிலையைச் சில நாள் பொறுமையோடு ஏற்றிருந்தான். ஆனால், செய்வதொன்றுமின்றிச் சும்மாக் கிடக்கின்ற வாழ்க்கை அவனுக்கு வெறுப்புண்டாக்கியது. இத்தகைய கேடெல்லாம் தனக்கு நரபாலனின் உறவினால் வந்துற்றதென அவன்மீது மிகுந்த சினத்தோடு சிறிதுநாள் கழித்த இவன், அத்தீயோனின் உரையைப் பொய்யென்று தள்ளாது பொருளுடையதெனப் பாவித்துத் தன்னைத் தண்டிக்கும் தந்தையை மிகுதியும்வெறுக்கலாயினான். அரசன்பால் பொய்புகன்று அவ்வாறு செய்வித்த விராடபத்திரனைத் தன்னெஞ்சம் கொதிக்க இடைவிடாது நினைப்பதுமாயினான். திருடாத பிள்ளையைத் 'திருடினாய்' என்றடித்தால் அப்பிள்ளை திருடவே நினைப்பதுபோல், சித்ராங்கன் மறுபடி நரபாலனின் கூட்டுறவை நாடுதற்கெண்ணங்கொண்டு அவனைத் தன்பால் வருமாறு ஆளனுப்பி அழைத்திட்டனன்.

பதிபீதிப் போயினன் இளவரசன் எனக் கைபற்றிருந்த நரபாலன் இச்செய்திகேட்டு ஊக்கம்தலைசிறக்க உடனே தாமோதரனிற்குச் சொல்லியனுப்பவே, அவனிவன் நெஞ்சத்தடர்ந்த தீமையெலாந் திரண்டோருருக்கொண்டாலென வந்து தோன்றினான். அவனுக்கு யாவையுங் கூறி நரபாலன், "தாமோதரா, வா, வா, வெட்டுமுன் படுகுழியில் அம்மதயானை தானே வந்தழுந்துகின்றது, வா" என்றனன்.

"ஹி! ஹி! ஹி! விராடபத்ரனுடன் செய்துள உடன்படிக்கை நிலைக்குமோ, மாறுமோ!"

"நிலைக்காதாயின் அவன்தலைக்கு என் மறு கை இருக்கின்றது. ஐயுறேல். என்பழியும் நின் பேரவாவும் ஒருங்கே நிரம்புங்கால் வந்துற்றது. விதியே தேடித்தந்தால் விலக்குவா ருளரோ. புறப்படு," என நரபாலன் விரைந்து தூண்ட, "எப்படித் தீருமோ அப்பனுக்கே வெளிச்சம்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு தாமோதரன் புறப்பட்டான். வழியிலிவ் விருவரும் மேல் நடக்க வேண்டியவைகளை ஆலோசித்து முடித்துக் கொண்டனர்.

பிரதாபதீரரின் மாளிகையைச் சூழ்ந்திருந்த நந்தவனத்திற்கு மூன்றுபுறம் மதிலும் ஒருபுறம் குண்டலினி நதியும் எல்லைகளாயிருந்தன. மதிற்புறம் தாண்டித்தான் வாயில்வழி உள்ளேகக் காவலாளர் இடந்தரார் என்றுணர்ந்த நரபாலன் சிறு படகொன்றி லேறி ஆற்றின்வழி அங்குச் சேர்கையில் கரையோரம் காத்திருந்த இளவரசன் அவனுக்குக் கைகொடுத்துக் கரையேற்றிச் சுகம் வினவ, நரபாலன், "அரசே, நீ காவலுட்பட் டுழல்வதைக் காண யாம் பெரிதும் வருந்துகின்றோம்." எனத் தாமோதரனையும் உளப்படுத்திக் கூறினானேனும் சித்திராங்கன் அவனைத் திரும்பியும் பார்க்கவில்லை. மற்று, நரபாலனது வினய மொழிகளுக்கு மறு வினயமும் மொழிந்திலன். "நரபாலா, அன்றிரவு நடந்த கொலை ஆருக்கும் அடுக்காது. அது உனதுத்தரவின்படி நடந்ததல்லவே," என்று தன்னினைவு மறந்தவன் பேசுவது போல் பேசினான்.

"சத்தியமாயில்லை. சித்ராங்கா. யாவும் அம்மகோதரனின் மதியீனத்தால் நேர்ந்தவை. என்கையைத் துணித்த காதகனைப் பொருந்தப் புடைத்துவிட்டு வாவென்றனுப்பினேன். அம்மதியிலாப் பேய் இரு விதத்திலும் தவறிழைத்துளது. ஆளும் வேறு. அடிப்பதற்குக் கருவியும் அதுவல்ல. பிரம்பிற்குப் பதிலாய்க் கோடரியை உபயோகித்து விட்டான்."

"கழிந்தன கழிக. தவறிற்கு இரையானவன் தையற்காரனே யாதலால், விட்டேன். கம்மியனாயின், உன்னை யான் ஏது செய்திருப்பேனோ!......அவனுக்கு நிகர் உத்தமன் இவ்வவனியிற் கிடைப்பதரிது......நல்லது... இக்கொடியோன் அந்தரத்திலாடி மாய்ந்தானோ?........ போயிற்றோ அவனுயிரும்........"

"நாற்பதடி உயரத்தில் நன்றாய்த் தொங்கினான்."

"சனி தொலைந்தது. அப்பாதகனைச் செத்தானென்பதற்கு நினைத்தாலும் பாவம்......நரபாலா, நமது நகரச் செய்திகள் என்ன? களியாட்டயரும் காளையரும், காமனைவென்ற முகத்துக் கன்னிமாரும் எவ்வாறு இருக்கின்றனர்," என ஊக்கமின்றிப் பண்டைநாள் நினைவினாற் கேட்டனன் சித்ராங்கன். இச்சமயம், நரபாலனது அங்கியைப் பின்புறம் நின்ற தாமோதரன் மெல்லப்பிடித்திழுத்து ஒரு குறிபோக்கினான். குறிப்புணர்ந்த நரபாலன், "அரசே, காந்தாரநாட்டுக் கட்டழகி நின் நினைவில் இன்னும் இருக்கின்றனளோ!" என வினவினான்.

"என்ன, நரபாலா, இக்கட்டழகியைக் கடிதின் மறப்பதா. அன்று வெட்டுண் டகன்ற நின் கை யுன்னை மறந்துவிட்டது போல், நானுமப் பெண்ணை மறப்பேனென் றெண்ணினையோ!"

"ஆயின், காந்திமதி நினது சித்ரமோகன மாளிகைக்குப் போகின்றாள்.........இல்லை, இல்லை, அரசே, நின் வரவை எதிர்நோக்கித் தலைப்படு மிடமாக வன்று. இதற்குள் மகிழ வேண்டா—உன் மனைக்கிழத்தி மந்தாகினி எனும் பெருமாட்டியின் ஆதரவின்கீழ் அமர்ந்திருப்பதற்காகவே."

"மனைக்கிழத்தி!...என் பகைக்கிழத்தி......என்ன! இச்சிறுமியுமா என் பகையுடன் சேர்கின்றாள்...... நல்லது, நரபாலா, அப்பாதகஞ்செய் அழகியைத் தண்டிக்க வேண்டும்."



"இந்த விடயத்தில் இளவரசர் விதிக்கும் சிக்ஷை மிக்க மென்மையா யிருக்குமென்றே நம்புகின்றேன்." என்று இடையிற் சொல்லித் தாமோதரன் சிரித்தான்.

"கடிதோச்சி மெல்ல எறிவதல்லவா இராஜதர்மம்?" என்று சொல்லிக்கொண்டே சித்ராங்கனும் சிரித்தான்.

"மகாராஜாவிற்கு அரசாட்சிதான் அமைகின்ற வழியைக் காணோம்", என்று நரபாலன் பரிகசிக்கச் "சமயம் வாய்க்காததற்குக் காரணம், தேவரீர் இளவரசரவர்கள், முயற்சி எடுக்காமல் இருந்ததேயாகும்—இன்னும் நின்று கொண்டே காலத்தைக் கழிக்கின்றார்......" என்று தாமோதரன் இயம்பினான்.

இவைகளின் உட்பொருள் சித்ராங்கனிற்கு விளங்கியதும் விளங்காததுமா யிருந்தது. "என்ன, அங்கதம் பேசுகின்றீர்கள். மெய்யகலா உள்ளத்து உத்தம நேயர்காள். யாது நும் கருத்து. சிற்றப்பனைக் கொன்றுத் தந்தையைச் சிறைவைத்துச் சிங்காதனம் ஏற என்னை நீ ஒருமுறை நரபாலா, தூண்டிய நினைவு வருகின்றது. இன்றேதும் பாடமும் அதுவேயாயின், உங்கள் உடலிற்குந் தலைக்கும் நடுவில் கழுத்திருக்கின்றதைக் கயவர்காள், இப்பொழுதே தொட்டுப்பார்த்துக் கொள்ளுங்கள்," என்றதட்டிச் சித்ராங்கன் ஆட்களைக் கூப்பிட வாயெடுத்தான். அச்சமயம் தாமோதரனும் நரபாலனும் ஒருவர்பால் ஒருவர் குறிப்பாய ஓர்பார்வை போக்கினர். அதன்பொருள் தெரிவதற்கு இவ்விருவரும் அங்கு வருகின்றபோது வரும்வழியில் பேசிக்கொண்டதைக் கூற வேண்டியது அவசியமாகின்றது.

T. N. சேஷாசலம்.

# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

## பொருள் ஆராய்ச்சி.

### அன்பு ஆராய்ச்சி.

[467-ம் பக்கத் தொடர்ச்சி]

#### அன்பே அருந்தமிழ்.

அன்பராயினார் இடத்தே சென்று வேறொருவரைத் தொழுவாய் என்று சொல்வதே அவர்களுயிரை அறுக்கும் வாளாகும். பிறரைத்தொழுதால் தலைவனை வஞ்சித்துக் கொன்று பிறர் ஒருவரைக் கூடியது போலாகும் எனக் கருதிக் குலை நடுங்கிக் குன்றிப்போவர். அவர் அன்பிருந்தபடி அப்படியாகும். இனி, நடுங்க நாட்டந்தான் அன்பின் அளவைக் காட்டுகின்றது. தமது உயிர்த்தலைவனுக்கு இடையூறு ஏதோ நேரிட்டது என அறிந்ததும் உயிர் துறப்பர் உண்மை யன்பினர். நெடுஞ் செழியன் செங்கோல் தவறினான் என்றறிந்ததும் உயிர் துறந்த பாண்டியன் மனைவியைப் பற்றி முன்னரே கூறினோம். சேரன் செங்குட்டுவன் மனைவி அவ்வம்மையாரை,

"காதலன் துன்பம் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு வுறுக"

என்று வாழ்த்துகின்றான். அத்தகைய அன்புடையவர் இடத்தில் நடுங்க நாட்டம் எனும் சூழ்ச்சி அவர்கள் உயிரைக் குடித்துவிடும். பின் கதை யேது? ஆகவே நடுங்கநாட்டம் அன்பொழுக்கத்தில் இல்லை. கைக்கிளை முதலிய டல்வகையான வேற்றொழுக்கங்களில் அவை வருதல் அழகுடைத்தாம் என்பர். இருவாது உள்ளத்தியல்பு இவ்வாறு இருந்த தென்பதும், ஈருயிரும் ஒருயிரான நிலை இன்ன தென்பதும், அன்பெல்லாம் தலையன்பே யன்றி இடையன்பும் கடையன்பும் அல்ல என்பதும் தெளிவாயின.

பெருந்தமிழ்ப் புலவர்கள் வடமொழிக் கதைகளைத் தமிழில் மொழி பெயர்க்கும் போதும், காதலன் காதலி ஒன்றுபடுவதைத் தமிழர்கண்ட அன்பொழுக்கமாகவே கூறுவர். சொக்குவேள் மாக்கதையைப் பற்றி முன்னரே கூறினோம். வலிதிற் கூடும் வள்ளியம்மை திருமணத்தைக் கச்சியப்பர் அன்பொழுக்கமாகவே கூறிக் கோவை பாடுகின்றார். கம்பரும் தனது கதையின் தலைவிக்கும் தலைவனுக்கும் அன்பொழுக்கத்தின்படியே திருமணம்செய்விப்பர். முதலில் இருவரும் ஒருவரையொருவர் கண்டு தம்முணர்வற்றனர். பின்னர் இராமன் வில்லை முறித்தனன். வில்லை முறித்து மணம் செய்துகொள்வதைக் கைக்கிளை என்பர் தமிழர்கள். ஆனால் இராமனும் சீதையும் கண்டதும் காதல்கொண்டவர்களாதலின் ஐந்திணை யொழுக்கத்தால் அன்பராயினார் என்பதைத் தமிழ் வழக்கப்படி கூறினார் கம்பர். அத்தெய்வப் புலவர் அந்நிலையைப் புகழ்ந்த பாக்கள் அன்பின் இயல்பினை நன்கு விளக்குதலால் அவற்றை இங்குத் தந்துரைக்கின்றோம்.

எண்ணரு நலத்தினாள் இனைய நின்றுழி
கண்ணொடு கண்ணிணை கௌவி யொன்றையொன்று
உண்ணவும் நிலைபெறா துணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.
பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரு மாறிப்புக்கு இதயம் எய்தினார்.
மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும்
ஒருங்கிய இரண்டுடற்கு உயிரொன் றாயினார்
கருங்கடற் பள்ளியில் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ.

பின்னர் இராமன் வில்லினை முறித்ததைச் சீதையிடம் வந்து பெண்கள் சொல்லினர்.

"கோமுனி யுடன்வரு கொண்டல் என்றபின்
தாமரைக் கண்ணினான் என்ற தன்மையால்
ஆமவனே கொல் என்று ஐய நீங்கினாள்" என்றும்
"சொல்லிய குறியின் அத்தோன்றலே அவன்
அல்லனேல் இறப்பன் என்று அகத்துள் உன்னினாள்"

என்றும் அன்பொழுக்கப்படி பாடிப் போதல் காண்க.

பிறர் தம்மைத் தீண்டினும் பெருங்கற்பும் பேரன்பும் உடையார் இறந்துபடுவார் என்ற தமிழக் கொள்கையை அறிந்த கம்பர் சீதையை இராவணன் தொடாத வண்ணம் செய்தார்.

"தீண்டுவா னெனின் இத்தனைச் சேண்பகல்
ஈண்டுமோ உயிர் மெய்யினிமைப் பின்முன்
மாண்டு தீர்வன் என்றே நிலம் வன்மையால்
கீண்டுகொண் டெழுந்தேகினன் கீழ்மையான்"

எனச் சீதை அனுமாரிடம் கூறுதல் காண்க. இஃது வான்மீகர் கூறியதற்கு முற்று மாறானது என்பதை நினைப் பூட்டிக்கொண்டால் கம்பர் தமிழர் ஒழுக்கப் படியே பாடிப் போகின்றார் என்பது வெள்ளிடை.

கண்டதும் காதல் கொண்டதன்றி வில் முறித்து மணந்துகொள்ளவில்லை என்பதனைப் பின்னரும் நினைப் பூட்டுவர். இராமர் சீதையிடம் சொல்லுமாறு அனுமா ருக்கு அடையாளங்களை எடுத்துச் சொல்கின்றார்.

முன்னை நான் முனியொடும் முதிய நீர் மிதிலைவாய்ச்
சென்னிநீள் மாலையான் வேள்வி காணிய செல
அன்னமாடுந் துறைக் கருகு நின்றாளை அக்
கன்னி மாடத்திடைக் கண்டதும் கழறுவாய்.

வரைசெய்தாள் வில்லிறுத்தவன் மாமுனியொடும்
விரசினன் அல்லனேல் விடுவன்யான் உயிரெனக்
கரைசெயா வேலையிற் பெரிய கற்பினள் தெரிந்து
உரைசெய்தாள் அஃதெலாம் உணரநீ உரை செய்
[வாய் "

என்று "தாஅ ளூட்டித் தனது நிறப்பாகச்" சொல்லிப் போதல் காண்க.

'காதலனும் காதலியும் கூடித் துய்க்கும் இன்ப அன்பினை இவ்வண்ணம் தமிழர் இனிதாக எடுத்துரைப்பர். இவ்வன்பு வாழ்க்கையினை அவர் ஐந்து பகுதியாகப் பிரித்துக்கொண்டனர். முதலில் இருவரும் கூட வேண்டும். கூடுவதனைக் குறிஞ்சித் திணை எனவழங்கினர். குறிஞ்சிப் பூப் பூக்கும் நிலமாகிய மலைநாடு அவ்வொழுக்கத்திற்குப் பலவகையாலும் சிறந்ததெனக் கொண்டு குறிஞ்சியில் நடக்கும் ஒழுக்கத்திற்குக் குறிஞ்சி எனப் பெயர்தந்தனர். இஃது இளம்பூரணர் கொள்கை. நச்சினார்க்கினியர்வேறு கூறுவர். இது நிற்க, அன்பொழுக்கத்தை எவ்விடத்தில் நடப்பதாகக் கூறினால் அழகுபடும் என்றும் ஆராய்ந்தார்கள். உள்ளத்தியல்பை நன்குணர்ந்த பழைய தமிழர்கள் உலகியல்பை அறியாது போவார்களா? வெளி உலகம் ஒருவகையில் நமது உள்ளநிலையை அடக்கி ஆள்கின்றது. சினம் கொண்டுள்ளவனை வெயிலில் விட்டால் சீறித் தான் விழுவான். அமைதியாய் இருப்பவன்மேல் அனல் வாடை வீசினால் உடல் வெம்பி உள்ளமும் வெதும்புகின்றான். சிடு சிடு என்று விழுவோனையும், சில் என்றோடும் தேனிற் சிறந்த நிழலோடை யருகே குளு குளு என்றிருக்கும் சோலை நிழலில் முல்லையின் மணத்தோடு மெல்லென்று வீசும் தென்றற் காற்றில் காதினிக்கக் குயில்பாடவும் கண்களிக்க மயிலாடவும் இவற்றினிடையே அமைதியானது இன்பக் கூத்தாடவும் இயற்கை யன்னை இன்ப விருந்தளிக்கும் வெட்ட வெளியில் விட்டுவிட்டால் அவனும் அமைதி யடைந்து அன்புருவ மாவான். அங்ஙனமே காதலனும் காதலியும் கூடி இன்பந்துய்க்கும் ஒழுக்கமாகிய குறிஞ்சித் திணையானது அழகுபெற்று விளங்குவதற்கு எந்த இடம் சிறந்தது, எந்தப்போது தகுந்தது என ஆராய்வாராயினர் அருந்தமிழர். இது களவொழுக்க மாதலின் செடி கொடி யடர்ந்த மலையானது மறைவிடமாகி இத்திணைக்குச் சிறந்ததாகும். பட்டம் பகலினும் இரவில் நடுயாமமே சிறந்ததெனச் சொல்லவும் வேண்டுமா? அவ்வாறே ஒவ்வொரு ஒழுக்கத்திற்கும் ஒத்த இடமும் போதும் ஆராய்ந்து கூறியுள்ளார்கள். மற்றைய ஒழுக்கமாவன:-முல்லை, அதாவது காதலனதுசொற்படி காதலி இருத்தல். நெய்தல் அதாவது இரங்குதல்; பாலை அதாவது பிரிவு; மருதம் அதாவது ஊடுவது. கூடுவது ஊடுவது பிரிவது இரங்குவது பொறுப்பது இவ்வளவுதானே காதலன் காதலி கதை. இவற்றை இன்னும் அகலக் கூறி விளக்க வேண்டுவதில்லை. அவ்வவ்இடனும் அவ்வந் நிலனும், அவ்வவ் ஒழுக்கத்திற்கு இன்றியமையாச் சிறப்பினவாய் நிற்றலை நாம் புத்தம் புதிதாகப் படைத்துக் கூறவில்லை. பழைய உரையாசிரியர்களையே பேசச் சொல்வோம்.

"இவ்வறுவகைப் பருவமும் அறுவகைப் பொழுதும் இவ்வைந்திணைக்கு உரியவாறு என்னை எனின், சிறப்பு நோக்கி என்க. என்னை சிறந்தவாறு எனின், முல்லையாகிய நிலனும், வேனிற் காலத்து வெப்பம் உழந்து மரனும் புதலும் கொடியும் கவினழிந்து கிடந்தன, கார்ப் புயல்கள் முழங்கக் கவின்பெறு மாகலின் அப்பருவம் சிறந்ததாம். மாலைப்பொழுது அந்நிலத்திற் கின்றியமையாத முல்லைமலரும் காலமாதலானும், அந்நிலத்துக் கருப் பொருளாகிய ஆன்நிரைவரும் காலமாதலானும், ஆண்டுத் தனி இருப்பார்க்கு அவை கண்டுழி வருத்தம் மிகுதலின் அதுவும் சிறந்ததாயிற்று" (இளம் பூரணர்) "முல்லைக்குக் காரும் மாலையும் உரிய. அதற்குக் காரணம் என்னை எனின், பிரிந்து மீளும் தலைவன் திறமெல்லாம் பிரிந்திருந்த கிழத்தி கூறுதலே முல்லைப் பொருளாயும், பிரிந்துபோகின்றான் திறங்கூறுவன எல்லாம் பாலையாகவும் வருதலின் அம்முல்லைப் பொருளாகிய மீட்சிக்குத் தலைவி இருத்தற்கும் உபகாரப்படுவது கார்காலமாம்; என்னை? வினைவயிற் பிரிந்து மீள்வோன் விரைஇப் பரித் தேர் ஊர்ந்து பாசறையினின்று மாலைக்காலத்து ஊர் வயின்வரூஉம் காலம் ஆவணியும் புரட்டாசியும் ஆதலின் அவை வெப்பமும் தட்பமும் மிகாதுஇடை நிகர்த்தவாகி ஏவல் செய்துவரும் இளையோர்க்கு நீரும் நிழலும் பயத்தலானும், அரா பதம் மிக்கு நீரும் நிழலும் பெறுதலின் களி சிறந்து மாவும் புள்ளும் துணையோ டின்புற்று விளையாடுவன கண்டு தலைவற்கும் தலைவிக்கும் காமக் குறிப்பு மிகுதலானும் என்பது. புல்லை மேய்ந்து கொல்லேற்றோடே புனிற்றாக் கன்றை நினைந்து மன்றில் புகுதரவும், தீங்குழலிசைப்பவும், பந்தர் முல்லை வந்து மணம் கஞன்றவும், வருகின்ற தலைவற்கும் இருந்தலைவிக்கும் காமக்குறிப்புச் சிறத்தலின் அக்காலத்து மாலைப்பொழுதும்உரித்தாயிற்று. (நச்சினார்க்கினியர்) இனிக் குறிஞ்சியாவது புணர்தற்பொருட்டு. அது இயற்கைப் புணர்ச்சிமுதலியனவாம். இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்தபின் களவு நீட்டிப்பக் கருதும் தலைவற்கும் களவினைச் சிறப்பிக்குங்கால் தலைவி அரியளாக வேண்டுமாகவே அவ்வருமையை ஆக்குவது ஐப்பசியும் கார்த்திகையு மாகிய கூதிரும் அதின் இடையாமமும் என்பது. என்னை? இருள் தூங்கித்துனி மிகுதலின் சேர்தல் அரிதாதலானும், பானாட்கங்குலிற் பாந்துடன் வழங்காது மாவும் புள்ளும் துணையுடன் இன்புற்று வதிதலின் காமக் குறிப்புக் கழியவே பெருகுதலானும், காவன் மிகுதி நோக்காது வரும் தலைவனைக் குறிக்கண் எதிர்ப்பட்டுப் புணருங்கால் இன்பம் பெருகுதலின் இந்நிலத்திற்குக் கூதிர் காலம் சிறந்தது எனப் படும்." (நச்சினார்க்கினியர்) "குறிஞ்சிக்குப் பெரும்பான்மையும் களவிற் புணர்ச்சி பொருள் ஆதலின் அப்புணர்ச்சிக்குத் தனியிடம் வேண்டுமன்றே; அது கூதிர்காலத்துப்பகலும் இரவும் நுண்டுளி சிதறி இயங்குவார் இலராகலின் ஆண்டுத் தனிப்படல் எளிதாகலின் அதற்கு அது சிறந்தது. நடுநாள் யாமமும் அவ்வாறாகலின் அதுவும் சிறந்தது." (இளம்பூரணர்)

"பாலைக்குப் பொருளாவது பிரிவு. அப்பிரிவின்கண் தலைமகற்கு வருத்தமுறும் என்று தலைமகள் கவலும் கால் நிழலும் நீரும் இல்லாத வழி ஏகினர் எனவும் கவலும் ஆகலின் அதற்கு அது சிறந்தது." (இளம் பூரணர்) "காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமைகூரச் சோலைத் தேம்பிக் கூவன் மாறி நீரும் நிழலும் இன்றி நிலம் பயந் துறந்து புல்லும் மாவும் புலம்புற்று இன்ப மின்றித் துன்பம் பெறுவதொரு காலமாதலின் இன்பத்திற்கு இடையூறாகிய பிரிவிற்கு நண்பகலும் வேனிலும் சிறப்புடைத்தாயிற்று." (நச்சினார்க்கினியர்)



"இனி மருதத்து நிலன் பழனஞ் சார்ந்தஇடமாகலின் ஆண்டுறைவார் மேன்மக்களாகலின் அவர் பரத்தையிற் பிரிவுழி அம்மனையகத்து உறைந்தமை பிறரறியாமல் மறைத்தல் வேண்டி வைகறைக்கண் தம்மனையகத்துப் பெயரும்வழி ஆண்டு மனைவி ஊடலுற்றுச் சார்கிலளாம். ஆதலால் அவை அந்நிலத்திற்குச்சிறந்தன." (இளம் பூரணர்) 'ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின், என்ப ஆகலின் ஊடலிறுதிக்கண் கூடல் ஒருதலை என்பது பெறப் படுதலின், கற்புக் காலத்து நாள் வெயிற்காலையில் புணர்தன் முறையன்மையின் அக்காலத்தினூடல் சொல்லாமையானும் (சிவஞான யோகிகள்) காலை வருவதற்கு ஊடலுணர்ந்து கூடுதற்குத் தகுந்தது வைகறையாதலின் அந்நிலத்திற்கு அது சிறந்தது. "செவியறிவுறுத்தலைச் செவியறிவுறூஉ என்றாற்போல வைகுறுதலை வைகுறு என்றார். அது மாலையாமமும் இடையாமமும் கழியும் துணையும் அக் கங்குல் வைகுறுதல்' அது கங்குல் வைகிய அறுதியாதல் நோக்கி வைகறை எனவும் கூறுப. பரத்தையில் பிரிந்த தலைவன் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் பொழுது கழித்துப் பிறர்க்குப் புலனாகாமல் மீளும் காலம் அதுவாதலானும், தலைவிக்குக் கங்குல் யாமம் கழியாது நெஞ்சழிந்து ஆற்றாமை மிகுதலான் ஊடல் உணர்த்தற் கெளிதாவாதோர் உபகாரம் உடைத்தாதலானும் வைகறை கூறினார் (நச்சினார்க்கினியர்)

இனி வெஞ்சுடர் வெப்பம் கொண்டு வெதும்புதற்கு முன்னர் இள வெய்யில் இனிதே காயவும் தண்ணறுஞ் சோலை தாழ்ந்து நீழல் செய்யவும் தண்பதம் பட்ட தெண்கழி (மேயப்) பல்வேறு வகைப்பட்ட புள்ளெலாம் கூவி எழுந்து கூடிக் குலாவிக் குடம்பை விட்டு "உடங்கு பெயரவும், புன்னை முதலிய பூவின் நாற்றம் முன்னின்று கஞற்றவும், காலையில் காற்றுக் கடிமணத்தோடும், புத்துயிர் தந்து பொலிந்துலாவவும் நெடுந்திரை யமுவத்து நிலாக்கதிர் மறையவும், அமைதியின் இடையே ஆவென வாய்விட் டலறிப் புலம்பி அக் கடல் ஒலிப்பவும், வெண் மணல் கடலென விரிந்து பரந்து முன்னம் தனிமையை முழுதும் உணர்த்தவும் கடற்கானும் கானற்கானும் நிறைகடந்து வேட்கை புலப்பட உரைத்தலின் ஆண்டுக் காமக் குறிப்பு வெளிப் பட்டு இரங்கற் பொருள் சிறத்தலின் எற்பாடு (அதாவது காலைப்போது) நெய்தற்கு வந்தது, (நச்சினார்க்கினியர் கூறியதை மாற்றிக் கூறியது இது). ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் ஊழியாய்க் கழித்துத் தனித்து வாழ்வோர் இரவெலாம் இனிய துணைவரை நினைந்து வருந்தி இமையொடு இமை கொட்டாது புரண்டு புரண்டு எழுந்ததும் வெயிலைக் கண்டு புழுப்போல் துடி துடித்து மற்றொரு நாளும் வந்தது, இனி என் செய்வது எனப் புலம்புவர் அன்றே. "தலைவன் பிரிந்துழித் தனித்திருந்த தலைவி இராக்காலம் முழுவதும் கொன்னே கழிந்தமைபற்றி இரங்குதற் குரியகாலம் அதுவாம் என்பார்" எற்பாடு நெய்தலாதன் மெய்பெறத் தோன்றும்" என்றார் (சிவ ஞான யோகிகள்.)

இன்னும் அக்காதலனும் காதலியும் அவ்வப்போது அடையும் உடல் மாறுபாட்டினையும் ஒன்று விடாது கூறுவர்; முகவேறுபாட்டினையும் முழுதும் விரித்துரைப்பர். செய்யும் தொழில் கூறுபாட்டினையும் செவ்வனே திரட்டிச் சொல்லுவர். தமிழ்ப் பெரியோர் உலகத்தினது உள்ளத்தியல்பை உய்த்துணரும் நுண்மையும் உலகத்துப் பொருள்களின் விரிவை உணர்ந்தறியும் திறமையும் உடையர் என்பதனை இவை எல்லாம் நன்கு தெரிவிக்கின்றன. இவற்றின் விரிவை அகன்றநூலில் கண்டு கொள்க.

தமிழர்கள் இவ்வாறு அன்பினை நமக்குச் சுட்டிக் காட்டி உள்ளார்கள். பொன்னானது இரும்போடும் செம்போடும் மண்ணோடும் கல்லோடும் சேர்ந்து கிடக்கின்றது. அதனைத் தெள்ளி எடுத்து உருக்கிப் புடம் போட்டுச் செம்பொன்னாக்குகின்றோம். பழந்தமிழர்களும் அவாவோடும் அருளோடும் இன்னும் பிறபொருள்களோடும் தலைமயங்கிக் கிடக்கும் அன்பினையும், அவற்றினின்றும் வேறு பிரித்துப் பின் ஒருபுடத்திற்கு ஆயிரம் புடம்போட்டுக் கலப்பும் களிம்பும் நீக்கி ஆயிரமாற்றுச் செம்பொன்னாக எடுத்துச் சிவனாக உருக்கி வார்த்தார்கள். அன்பின் வேறுபாட்டை எல்லாம் பாட்டாகப் பாடினார்கள். அவற்றின் உண்மைப் பொருள் உணர்ந்த பின் " பத்துப்பாட்டு எட்டுத் தொகை பதினெண் கீழ்க் கணக்கு முதலிய இலக்கியங்களையும் ஓர் பொருளாக எண்ணி வாளாள் வீணாள் கழிப்பர் " என்று கூறுவரோ. இறைவன் பாடிய பாக்கள் பல எட்டுத் தொகையில் இருப்பதனையும், திருக்குறளும் பதினெண் கீழ்க் கணக்கில் ஒன்றென்பதனையும், பதினோராந் திருமுறையில் அடங்கிய திருமுருகாற்றுப் படை பத்துப் பாட்டுள் ஒரு பாட்டென்பதனையும், சங்கப் புலவர்கள் பொய்யடிமை இல்லாத புலவர்கள் என்பதனையும் இலக்கணக் கொத்துக்காரர் எங்ஙனம் மறந்தாரோ யாம் அறியோம். மாங்காய் புளித்ததோ வாய்புளித்ததோ என்று பேசுவதிற் பயனில்லை. தெய்வப் புலவர்கள் பாடிய காதற்பாட்டெல்லாம் அன்பின் பாட்டாகும்; சிவன்பாட்டாகும். இதனால் அல்லவா இதற்கு இலக்கணத்தை இறைவனே எழுதியருளினார். அதன் பொருளை உணர இறைவனது திருப்பிள்ளை யன்றோ அருகர் ஆயினார். " கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரைகேட்ட இடத்து ; மெய்யல்லா உரைகேட்டவிடத்து வாளா இருக்கும் " என்றல்லவா இறைவனார் கூறினார். அன்புருவான இறைவனைப்பற்றிய தாதலால் அல்லவா கண்ணீர்வார்ந்து மயிர் சிலிர்த்தார். ஆகவே அகப்பாட்டு, சிவப்பாட்டு என்பது ஒருதலை.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

# தமிழ்ப் பாடம் 24.

## நள வெண்பா

(470-வது பக்கத் தொடர்ச்சி)

### சுயம்வர காண்டம்.

இனிவரும் ஒன்பது செய்யுள்கள் தமயந்தியின் திருமணத்தை அழகுடன் உரைப்பதோடும் இச்சுயம்வர காண்டம் முடிகின்றது

வெங்கதிரோன் தானும் விதர்ப்பன் திருமடந்தை
மங்கலநாள் காண வருவான்போற்—செங்குமுதம்
வாயடங்க மன்னற்கும் வஞ்சிக்கு நன்னெஞ்சிற்
றீயடங்க வேறினான் தேர். 152.

**பதப்பிரிவு** :—வெம் கதிரோன் தானும் விதர்ப்பன் திருமடந்தை மங்கலம் நாள் காண வருவான்போல் செம் குமுதம் வாய் அடங்க மன்னன்கும் வஞ்சிக்கும் நல் நெஞ்சில் தீ அடங்க ஏறினான் தேர்.

**கருத்து** :—விவாகதினத்தில், மணவினை காண்பதற்கு வருபவனைப்போல் சூரியன் உதயமாயினான்.

**பதவுரை.**

வெம் - வெப்பமாகிய
கதிரோன் - கிரணங்களையுடைய சூரியன்,
தானும் - தானும்
விதர்ப்பன் - விதர்ப்ப ராஜனுடைய
திரு - அழகிய
மடந்தை - பெண்ணினது
மங்கலம் - மங்களகரமாகிய
நாள் - தினத்தை
காண - காண்பதற்கு
வருவான்போல் - வருகின்றவனைப்போல்,
செம் - சிவந்த
குமுதம் - அல்லிமலர்கள்
வாய் - தம் வாய்
அடங்க - மூடிக் கொள்ளவும்,
மன்னன்கும் - நளனுக்கும்
வஞ்சிக்கும் - வஞ்சிக்கொடி போன்ற தமயந்திக்கும்
நல் - அவர்களது, நல்ல
நெஞ்சில் - மனதில்
தீ - காமத்தீயானது
அடங்க - அவியவும்
தேர் - தன் ஒற்றைச்சக்கரத் தேரில்
ஏறினான் - ஏறினான்.

**விளக்கம்**:—கதிரோன்— வருவான்போல்—அடங்க —அடங்க—தேர்—ஏறினான், என்று சேர்த்து நோக்க வேண்டும்.

**விரிவுரை**:—தமயந்திக்கு அது மணநாளாக இருந்தாலும் இல்லாமற்போனாலும் சூரியன் என்றையும்போல் அன்றைக்கும் உதயஞ் செய்திருப்பான். ஆயினும் இயற்கையாய் நிகழ்கின்ற அந்த நிகழ்ச்சிக்குக் கவி இங்குத் தன் குறிப்பிற்கு ஏற்றவாறு ஒரு காரணத்தைக் கற்பித்தார். ஆகையால் இது தற்குறிப்பு ஏற்ற அணி, அதன் இலக்கணத்தைப் பொதுவகையில் 130 வது பக்கத்தில் சொல்லி இருக்கின்றேன். இவ்வாறு, குறித்த விஷயத்தைச் சொல்கின்ற வகையில் தற் குறிப்பேற்ற அணி மூன்று விதப்படும். இந்த ஒவ்வொரு வகைக்கும் இவ்விரண்டு உள்பிரிவுகள் இருக்கின்றன. ஆக, இவ்வணியில் ஆறுவகைகள் இருக்கின்றன. இருப்பினும் முதல் பிரிவாகிய பிரிவுகள் மூன்றும் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதை மாத்திரம் இங்குப் பார்ப்போம்:—

(1) பொருள் தற்குறிப்பு ஏற்ற அணி : — இது பொருள் சம்பந்தமாக வருவது. "அந்தணர் செய்கின்ற ஓமப்புகையே மேகமாய்த் திரள்வதுபோல் அப்புண்ணிய பூமியில் மழைவளம் சிறந்திருந்தது." என்ற உதாரணத்தில்,மேகம் ஒருபொருள், புகை ஒருபொருள். ஒருநாட்டில் அந்தணர்கள் நெறியும் மழையினது வளமும் பிழைத்ததில்லை என்று சொல்வதற்குப் புகை என்னும் பொருளிற்கு மேகம் என்னும் மற்றொரு பொருளின் குறிப்பை ஏற்றினார். ஆதலால் இது பொருள் தற்குறிப்பு ஏற்ற அணி.

(2) ஏதுத் தற்குறிப்பு ஏற்ற அணி:-ஹேது, என்பது ஏது எனத் தமிழில் எழுதப்படும். ஏது என்றால் காரணம் அல்லது நிமித்தம் என்பது அர்த்தம். ஆதலின் இந்தவகை, காரண சம்பந்தமாக வருவது. "மாதரார் கருங்கண் பார்வைபட்டுப்பட்டு இராமனின் மேனி கரியதாயிற்றென்று சொல்லலாம்" என்ற உதாரணத்தைப் பார்ப்போம். இயற்கையாய இராமனின் கரியநிறத்திற்கு வேறு ஒரு குறிப்புச்செய்து அமைப்பதால் இதுதற்குறிப்பேற்றவணி. ஆனால் முன் உதாரணத்தில் புகை மேகம் என்ற இரண்டு பொருள்களுக்குள்ள பேதத்தைச் சந்தேகமாய்த் தேர்ந்ததுபோல், இங்கு எந்த இரண்டு பொருள்களுக்கும் உள்ள பேதத்தைப்பற்றிப் பிரித்தேனும் சேர்த்தேனும் பேசவில்லை மாதர்களுடைய பார்வைதான் இராமனது மேனியோ என்று எவரும் சந்தேகப்படவில்லை என்பதைக் கவனித்துக் கொள்ளவேண்டும். இயற்கையாகவே கருநிறமுடைய இராமன் தெரிவிலே போனபோது மாதர்களெல்லாம் இமை கொட்டாமல் பார்த்தனர் என்றவொரு குறிப்பை வைத்துக்கொண்டு, அப்பார்வைபட்ட காரணத்தினால்தான் கருமையாயினனோ என்று காரணத்தைச் சந்தேகமாக ஏற்றிப்பேசுகின்ற இது ஏதுத் தற்குறிப்பேற்ற அணி.

(3) பயன் தற்குறிப்பேற்ற அணி :—இது இயற்கையாய் நினையாத ஒரு பயனைக் குறிகொண்டு கற்பிப்பது. "நின்முகத்தின் பொலிவைப் பெறவேண்டுமென்றே தாமரை நீரில் நின்று தவம் செய்கின்றது." இந்த உதாரணத்தில் தாமரை தவம் செய்வதாகப்பாவித்து அந்தத் தவத்தால் பெறவேண்டிய ஒருபயனைச் சந்தேகமாய் ஏற்றுக்கொள்கின்றபடியினால் அது பயன் தற்குறிப்பேற்ற அணி ஆகின்றது.

இந்த வித்தியாசங்களெல்லாம் பார்த்த மாத்திரத்தில் தெரிந்து கொள்ளத்தக்கனவாய்ச் சுலபமாக இரா. மிகவும் நுணுக்கமானவை. கவனித்து ஆராய்ந்து தெரிந்து கொள்ளப் பழகவேண்டும். அப்பழக்கத்தினால் இன்பம் விளைவதன்றிப் பகுத்தறியும் நுணுக்கமும் மனதிற்கு ஏற்படும்.

இப்பொழுது, இந்தச்செய்யுள் என்ன அணி என்பது விளங்கும். சூரியன் மங்கலநாள் காண வருவான் போல் வந்தான், என்பது விஷயம். இதனில் இயற்கையாக என்றையும்போல் அன்றைக்கும் சூரியன் உதயமாகின்ற செய்தி சந்தர்ப்பத்திற்கு இணங்கக் கவியின் குறிப்பை ஏற்றுக்கொண்டது. ஆதலால் தற்குறிப் பேற்றவணி. சூரியன்தான் மங்கல நாளோ என்ற அவ்விரு பொருள்களுக்கும் ஒரு சந்தேகசம்பந்தமும் குறிக்கவில்லையாகையால், இது பொருள் தற்குறிப்பு ஏற்ற அணி அல்ல. மற்று, மங்கலநாள் காரணமாகச் சூரியன் உதித்தானோ, அல்லது சூரியன் உதித்த காரணத்தால் மங்கலநாளாயிற்றோ, என்றகாரண சந்தேகமும் ஒன்றுமில்லை. ஆகையால் ஏதுத் தற்குறிப் பேற்ற அணியுமல்ல. சூரியன் மங்களநாள் காண்கின்ற பயனை அடைய அன்றையதினம் வந்திருப்பானோ என்ற குறிப்புத்தோன்றுகின்றபடியால் இது பயன்தற்குறிப்பேற்ற அணியாகும்.



கொங்கையின் பாரத்தை இடுப்புச் சுமக்க முடியாது என்று நூபுரங்கள் புலம்பின (22-வது செய்யுள், 130 வது பக்கம்) என வருவதும் இத்தற்குறிப்பேற்ற அணியே ஏனெனில், நடக்கும் பொழுது காலில் சலங்கை ஒலிப்பது இயற்கை. ஆடவன் அணிந்திருந்தாலும் குழந்தைகள் அணிந்திருந்தாலும் அச்சலங்கை ஒலிக்கத்தான் ஒலிக்கும். இருப்பினும் அந்தச் சலங்கையின் ஒலி இங்கு ஒரு குறிப்பு ஏற்றுக்கொண்டது. முலையேனும் இடுப்பேனும் சதங்கையோடு நேராகப் பொருள்களாயிருக்கின்ற தன்மையில் சந்தேக சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. ஆகையால் பொருள் தற்குறிப் பேற்றவணி அல்ல. இடை ஒடியுமே என்ற இரக்கம் காரணமாகப் புலம்பின என்பது கருத்தாதலால் ஏதுத் தற்குறிப் பேற்ற அணி. அல்லது அவள் நடக்குந்தோறும் இவ்வாறு புலம்பி அவளை நடக்காதபடி செய்கின்ற பயனை அந்த நூபுரங்கள் கருதியன போல் குறிக்கப்படுவதால் இதனைப் பயன் தற்குறிப் பேற்ற அணி யென்றுஞ் சொல்லலாம்

"சந்திரனின் சுடர்பட்டு ஆகாயத்தில் உண்டான கொப்புளங்களை விண்மீன் என்று கூறலாமோ" (93 வது செய்யுள், 363-வது பக்கம்) என்றதும், தற்குறிப்பேற்ற வணி. நக்ஷத்திரமாகிய பொருளைக் கொப்புளம் என்ற பொருளாகக் குறித்ததால் அதுபொருள் தற்குறிப்பேற்ற அணி என்பது எளிதில் விளங்கும்.

**குறிப்பு** :—இடைச்சொல்லின் இலக்கணமும் ஓ ஏ என்பனவற்றின் பொருள்களும் ஒரு சிறிது கற்றிருக்கின்றீர். உம் என்பதும் தனியாக இருந்து அது அர்த்தமும் தராமல், பெயர்ச்சொல் வினைச்சொற்களோடு சேர்ந்துகொண்டே பொருள்தரும். ஆகையால் இதுவும் ஒரு இடைச்சொல். இதற்குப் பல பொருள்கள் இருக்கின்றன. அவைகளுள் சிலவற்றை மாத்திரம் இங்குப் பார்ப்போம்.

(1) இராமனும் கிருஷ்ணனும் கோவிந்தனும் வந்தனர், என்ற வழக்கு யாவரும் அறிவர். இதில் வருகின்ற உம் என்பது யார்யார் வந்தனர் என்று எண்ணுவதற்கு உபயோகப்படுகின்றது. ஆகையால் இதை எண்ணும்மை என்பர்.

(2) உம், மிகுதி அல்லது சிறப்புப் பொருளைத்தரும், நல்லதாயினும் கெட்டதாயினும் மிகுந்திருத்தலைக் காட்டுவதற்கு உம் வரும்போது அதனைச் சிறப்பும்மை என்பர். இந்தச் சிறப்பும்மை இரண்டு விதப்படும் :—

(a) ஒருபொருளின் அல்லது செயலின் மேன்மையை அல்லது மிகுதியைச் சிறப்பித்துக் காட்ட வருமாயின், அது உயர்வு சிறப்பு உம்மை ஆகும். "கலைமகளை ஆராதித்தால் கல்லும் சொல்லாதோ கவி," என்ற வாசகத்தில் உம், கல் என்னும் பெயர்சொல்லோடு சேர்ந்துவந்து என்ன காரியம் செய்கின்றது பாருங்கள். மனிதர் கவி சொல்வது ஆச்சரியமல்ல, கல்கூட அவளை ஆராதித்தால் கவிசொல்லும் என்பதால், கலைமகளாராதனையின் உயர்வைக் காட்டுகின்றது. ஆதலால் அது உயர்வு சிறப்பு உம்மை. கழுதும் வழிதேடும் கங்குல், என்று முன்னமே 113-வது செய்யுளில் வந்திருக்கின்றது. எப்படிப்பட்ட இருட்டிலும் எளிதாகச் சஞ்சரிக்கின்ற பேய்களும் வழிதேடியதென்றால் அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கவேண்டுமென்பதைக் கழுது என்பதோடு சேர்ந்த உம் சிறப்பித்தலால், அதுவும் உயர்வுசிறப் பும்மை.

(b) ஒரு பொருளின் அல்லது செயலின் தாழ்மையை அல்லது குறைவைச் சிறப்பித்துக்காட்ட வருமாயின் அந்த உம்மை, இழிவு சிறப்பும்மை ஆகும். "என்கையில் ஒரு தம்படியும் இல்லை," என்று சொல்லும்போது, தம்படியோ மிகக்குறைந்தது, அது இல்லாதான் இல்லை. அதுவும் இல்லை என்றால் இன்மையாகிய குறைவின் சிறப்பைக் காட்டுவதால் தம்படியும் என்பதிலுள்ள உம் இழிவு சிறப்பும்மை யாகின்றது. 'முகங்கடுத் திடுவார் சோற்றை நாயும் தின்னாது' என்பதும் இழிவு சிறப்பும்மையாவது விளங்கும்.

(3) உம், என்பது எச்சப் பொருளில் வரும். எச்சம் என்றால் குறைவு என்பது அர்த்தமென்று அறிவீர். ஒரு குறைவு நிறைவதைக்குறிக்க வரும் போது அதற்கு எச்ச உம்மை என்று பெயர். இந்த எச்ச உம்மை இரண்டு விதப்படும்:—

(a) 'இதோ கிருஷ்ணனும் வந்து விட்டான்' என்னும் போது, மற்றவர்களெல்லாம் முன்னமே வந்து இருந்தனர், கிருஷ்ணன் வருவது குறைவாயிருந்தது, அவனும் வந்ததால் அக்குறைவு நிறைந்துவிட்டது, என்று தெரிவதால், இது இறந்தது தழுவிய எச்ச உம்மை. கிருஷ்ணன் வந்தான் என்று இறந்த காலத்திலேயே எச்சம் பூர்த்தியானதைப்பற்றி இதனை இறந்தது தழுவியது என்றழைப்பர்.

(b) 'சற்றுப் பொறுங்கள், கிருஷ்ணனும் வருவான்,' என்றால் கிருஷ்ணன் வந்திராத குறை எதிர் காலத்திலே நிறையுமாதலால் இது எதிரது தழுவிய எச்ச உம்மை.

இவைகளல்லாமல், உம்மைக்கு, எதிர்மறை ஐயம் முற்று, தெரிநிலை, ஆக்கம் என்னும் பொருள்களும் இருக்கின்றன. அவைகளை வேறு சந்தர்ப்பத்தில் கற்கலாம்.

இந்தச் செய்யுளில்,வெங்கதிரோன் தானும் வந்தான், என வருகின்ற இடத்தில் உம் என்ன பொருளைத் தருகின்றது. மற்றவர்கள் வந்திருந்தனர், சூரியனும் வந்தான், என்று கொண்டால் இறந்தது தழுவிய எச்ச உம்மையாம். அல்லது சூரியன்கூட அந்த மங்கலநாளைக் காணவந்தான் என்று கொண்டால், உயர்வு சிறப்பும்மை.

மன்னற்கும் வஞ்சிக்கும், என்றதில் உள்ள உம்மைகள் எண்ணும்மை என்பது எளிதில் விளங்கும்.

குதிரை ஓடும். கிளிபேசும். படிக்கும் பிள்ளை. பெய்யும் மழை, என்பனபோன்ற இடங்களில் வினைமுற்றாகவும் பெயரெச்சமாகும் வருகின்ற உம்மைகளுக்கு இந்தப் பொருள்களெல்லாம் தேடி மயங்காதீர்கள். அவை விகுதிகளாய் நின்று வினைச்சொல்லை நடத்துவன.

இனித் தமயந்தி மணக்கோலம் கொள்வதும், நளனுக்கும் அவளுக்கும் மணவினை நிகழ்வதும், இருவரும் மணவாழ்க்கை எய்தி மகிழ்வதும் கூறப்பட்டிருக்கின்றன. அச்செய்யுள்கள் மிக்க அழகுடையன வாயினும் நம் பாடத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை யாகையால் உரையின்றிச் செய்யுள்களை மாத்திரம் தருகின்றேன்.

இன்னுயிர்க்கு நேரே யிளமுறுவ லென்கின்ற
பொன்னழகைத் தாமே புதைப்பார்போன்—மென் [மலருஞ்
சூட்டினர் சூட்டித் துடிசே ரிடையாளைப்
பூட்டினர் மின்னிமைக்கும் பூண். 153

கணிமொழிந்த நாளிற் கடிமணஞ் செய்தா
ரணிமொழிக்கு மண்ண லவற்குப்-பணிமொழியார்
குற்றேவல் செய்யக் கொழும்பொன் னறைபுக்கார்
மற்றெவரு மொவ்வார் மகிழ்ந்து. 154

செந்திருவின் கொங்கைபினுந் தேர்வேந்த னுகத்தும்
வந்துருவ வார்சிலைபைக் கால்வளைத்து—வெந்தீயு
நஞ்சுந் தொடுத்தனைய காம மலர்வாளி
யஞ்சுந் தொடுத்தா னவன். 155

ஒருவ ருடலி லொருவ ரொதுங்கி
யிருவ ரெனுந்தோற்ற மின்றிப்—பொருவெங்
கனற்கேயும் வேலா னுங் காரிகையுஞ் சேர்ந்தார்
புனற்கே புனல்கலந்தாற் போன்று. 156.

குழைமேலுங் கோமா னுயிர்மேலுங் கூந்தன்
மழைமேலும் வாளோடி மீள—விழைமேலே
யல்லோடும் வேலா னகலத் தொடும்பொருதாள்
வல்லோடுங் கொங்கை மடுத்து. 157.

வீரனக லச்செறுவின் மீதோடிக் குங்குமத்தி
னீர விளவண்ட லிட்டதே—நேர்பொருத
காராரு மெல்லோதிக் கன்னியவள் காதலெனு
மோரா றுபாய வுடைந்து. 158.

கொங்கை முகங்குழைபக் கூந்தன் மழைகுலைய
செங்கயற்க ணோடிச் செவிதடவ—வங்கை
வளைபூச லாட மடந்தையுடன் சேர்ந்தான்
விளைபூசற் கொல்யானை வேந்து. 159.

தைய றளிர்க்கரங்க டன்றடக்கை யாற்பற்றி
வைய முழுது மகிழ்தூங்கத்—துய்ய
மணந்தான் முடித்ததற்பின் வானுதலுந் தானும்
புணர்ந்தான் நெடுங்காலம் புக்கு. 160.

சுயவர காண்டம் முற்றிற்று.

## சொல்லாட்டம்.

14-7-'28-ல், வந்த சொல்லாட்டம் I, வினுக்களுக்கு விடை:—(1) தவலை (2) மதுரை. (3) தாமரை. (4) மயில் (5) விரல் (6) மறதி. (7) தவளை. (8) கோவில். (9) எருது. (10) நாவாய்.

சொற்களின் எழுத்துக்களைப் பிரித்தும் சேர்த்தும் அமைத்தலால் அர்த்தம் வேறுபடுவதை ஆதாரமாகக் கொண்டு ஒருவரையொருவர் கேட்டுப் பொழுதுபோக்குதற்கு உதவியா யிருக்குமென்று நமது நண்பர் ஒருவர் கீழ்வரும் விஞக்களை அனுப்பிவருகின்ருர். சிலருக்கு அது 'சுவாரஸ்யமா' யிருக்குமென எண்ணி அவற்றுள் சிலவற்றை இங்குத் தருகின்ரேம். விடை எமக்கு எழுத வேண்டியதில்லை. மறுவாரப் பத்திரிகையில் விடையை எழுதுவோம்.

விடைதேடுவது எங்ஙனமென அறியக் கீழ்வரும் உதாரணங்கள் உதவியாம்:—

1. கால்போனுல் குதிக்கும். தலைபோனுல் மறைக்கும், இடைபோனுல் தலைக்கும் மூன்றுமாய் ஓடுமோர் விலங்கு எது?

இது மூன்று எழுத்துக்களையுடைய ஒருசொல், கால் என்பது கடை எழுத்தையும், இடை என்பது நடு எழுத்தையும், தலை என்பது முதசலெழுத்தையும் குறிக்கும்.

இதற்கு விடை:—குதிரை. கால் அல்லது கடை எழுத்துப்போனுல் குதி. தலை அல்லது முதல் எழுத்துப் போனுல் திரை (மறைக்கும்) இடை அல்லது நடு எழுத்துப் போனுல் குதிரை-குலைத்தல். மூன்று எழுத்துக்களுமாய் ஓடும் குதிரை.

(II) அல்லது எழுத்துக்களின் வரிசையை 1, 2, 3, 4 என்னும் எண்களாலும் குறிக்கலாம்:—

இருக்குமிடம் முன்னிரண்டு. அவ்விடத்தில் இருப்பதுவும் பின்னிரண்டு. நாலுமாய்ச் சேர்ந்தாலோ நர்த்தனஞ் செய்வாள் ஒருத்தி?—ஊர்வசி. முன்னிரண்டு எழுத்துக்கள் சேர்ந்து ஊர்-இருக்குமிடம். பின்னிரண்டு எழுத்துக்கள் சேர்ந்து வசி-அவ்வூரில் இருப்பது. நாலும் ஊர்வசி-நடனம் செய்பவள்.

(III) பெறுவதும் மூன்று, நிற்பதும் இடையொடிந்து, தலையறுந்து போனுலும் இருக்குமே தலை?

மதலை:—மூன்று எழுத்துக்களும் மதலை-குழந்தை. இடை ஒடிந்தால், அதாவது நடு எழுத்துப் போனுல், மலை-நிற்பது. தலை அறுந்துபோனுல், அதாவது மதலை என்பதில் தலை எழுத்து (முதலெழுத்து) அறுந்துபோனுல் எஞ்சி இருப்பது தலை, என்னும் இரண்டெழுத்துக்கள்.

இவ்வாறே இனி வருவனற்றிற்கு விடை தேடிக் கொள்ளலாம்:—

### சொல்லாட்டம். 2.

(1) முதல் நின்று பால்தரும். இரண்டுடன் சேர்ந்து ஆச்சரியமே. முதலொழிய மற்ற மூன்றும் நா வருத்தும். இரண்டொழிந்தால் மாலையாம். முதலொடு முடிவுஞ் சேர்ந்தால் சம்மதமே. நாலுமே ஆகும் உணவு?

(2) மூன்று மிருந்தென்ன நடுவுடைந்த பின்னன்ரே காவியம் எழுதலாம்?

(3) நாலெழுத்துச் சொல்லொன்று மார்பாகும். அதுவே, முதலொழிந்து கடலையும், இரண்டொழிந்து நிலத்தையும் உழுதிடும்?

(4) கத்துவது மூன்று. இடையொடிந்தால் கேட்பதுவும் மற்றிரண்டு?

(5) மூன்றுமாய் ஆழ்வது நடுவின்றி நிமிர்ந்திடும்?

(6) ஐந்துமாக மாரிலே, இரண்டு மூன்று விட்ட போது ஊரிலே, ஒன்று இரண்டு ஒழியவே பெட்டியில் இருக்குமே?

(7) நாலுங்கடலிலே, தலையறுந்தால் கையிலே, இரண்டுபோக மற்ற மூன்றுங் காட்டிலே?

(8) மூன்றும் நீரிலே, தலையறுத்தால் கழுத்திலே, இடையொடித்தால் மாரிலே?

(9) நடுவுடைத்தால் கடிக்குமே ஓர் விலங்கு?

(10) ஐந்துமாய் ஓர் விலங்கு. இரண்டும் மூன்றும் போனுல் குதிரைக்குண்டு அவ்விலங்கிற்கில்லை. ஒன்றும் இரண்டும் போனுல் அம்பு ஆம். இரண்டும் நான்கும் போகவே தருப்பைப்புல்லாம்.

(இதற்குவிடை அடுத்தவாரம் வரும்.)



## அகத்திய முனிவர்.

தேன்மொழியாகிய தமிழ் கற்றவரும் மற்றவரும் முக்கியமாய் முதலாவதாக அகத்திய முனிவரைக் குறித்து அறிந்து கொள்ளவேண்டும். தமிழ் இலக்கண ஆசிரியர் குறிக்கும் வரிசையில் முதலிடம் அகத்திய முனிவருக்கே உரியதாகும். அகத்திய முனிவருக்கு முன்னுல் தமிழ் இலக்கணம் வகுத்தவ ரொருவருமில்லை. என்று முனதென் தமிழியம்பி யிசைகொண்டான், என்கிறபடி தற்போதைய நிலையிலும் தமிழ்இனமை குன்ருது நிலவி வருவதற்குப் போதிய விதிகள் கற்பித்து இலக்கணம் வகுத்து நிலை நிறுத்திப் பரவச்செய்தவர் முதலில் அகத்திய முனிவரைத் தவிர வேறில்லை.

மேல் நாட்டார் தம் பாஷையில் ஓர் நூலாசிரியர் இயற்றிய நூலை எவ்வளவு போற்றுகின்றனரோ அது போல அவரது நிகழ்ச்சியும் நடந்த ஆண்டு மாதம் நாள் நேரம் முதலியவைகளையும் விபரமாகக் குறித்திருக்கின்றனர். ஆதலால் பிற்காலத்தார் அச்சரித்திரங்கள் ஐயத்திற் கிடமின்றித் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன.

நம்மனோர் நூலைக் கருதினோர்களேயன்றி நூலாசிரியரை விட்டுவிட்டனர். அதனுல் பல விஷயங்கள் மறைந்து போயின. அன்றியும் சரித்திர வரலாறுகளும் அறிய முடியாமற்போயின. வினையோரும் ஊடாடிப் பார்க்குங்கால் நம்நாட்டுச் சரித்திரங்கள் சந்தேகத்திற் கிடமானவை என்கின்றனர். இஃதோர் பெருங் குறையே. ஒருவேளை சிறிது வரலாறுகள் கர்ணபரம்பரையாய் வந்து எழுதிவைத்தவையும் பெரும்பாலும் தற்குறிப்பேற்றம் இல்பொருளுவமை முதலிய அலங்காரங்கள் அமையப்பெற்று உண்மையறியப் பகீரத பிரயத்தினமாய் விட்டன. இவைகளுக்கெல்லாம் தப்பித் துணிந்த பொருளையும் உத்தேச மாத்திரையானே கூறலாமேயன்றி நிலைத்துச் சொல்ல இயலாது. பல நூதன புதிய ஆராய்ச்சியாளர் சிலர்கண்ட சாஸனம் முதலிய குறிப்புகளாலும் பிறவற்ருலும் பல அரசர்களுடையவும் புலவர்களுடையவும்விவரங்கள் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளன. அவைகளும் இற்றைக்குச் சுமார் 2000 வருஷங்களுக்குள்தான் அறியப்படுகின்றன. அதற்கப்புறம் காலெடுத்துவைத்தால் ஊமனுர் கண்ட கனவாகின்றது. அங்குச் சென்றும் துருவினுல், பல பெயர்கள் அறிந்தால் வரலாறு அறியமுடியாமலும் வரலாறுகள் அறியப்படுமாயின் பெயர்களறிய முடியாமலும் திகைத்து நிற்கவேண்டியவர்களாகின்ரேம்.

அகத்திய முனிவரோ சரித்திரக்கடலைத் தாண்டிப் புராண இதிகாசக் காட்டைக்கடந்து ஸ்மிருதியாற்றிலும் நீந்தி வேத உலகத்திற் சென்றுபார்த்தாலும் அங்கங்கு இடம்தோறு மிடந்தோறு மிருக்கிருர். அவரில்லாத புராண இதிகாசங்களில்லை. தவிர, பல புராணங்களுக்குக் கர்த்தாவாகவு மிருக்கிருர்.

புராணங்களோ முதனூல் வழிநூல் சார்புநூல் இலக்கணப்படி மாறுபாடடைந்திருக்கின்றன. ஓர் ஆசிரியர் தம் புராணத்திற்கு ஒரு காரணம்பற்றி எடுத்தாண்ட கதையை மற்ருெரு ஆசிரியர் வேருெரு காரணம் கற்பித்துத் தம் புராணத்தில் அமைத்திருக்கின்ருர். மற்ருெருவர் இவ்விரு காரணங்களிலிருந்தும் வேறுபடுத்திக்கொள்கின்ருர். இவ்வாறு மாறுபட்டுக்கொண்டே சென்று உண்மைக்கு விரோதமாய்ச் சந்தேகத்திற் குறைவிடமாயு மிருக்கின்றதது. தவிர, காலவரையறையைக் கவனித்தால் முழுவதும் ஒவ்வாமலிருக்கின்றது. இம்முறையிலிருந்து ஒருவருடைய வரலாற்றைத் தொகுத்தெழுதுவதென்ருல் சாமான்ய வருத்தமன்று. சிறிது தலையிட்டவரும் பல மறுப்புக் கிடமாதலைக் கண்டு தம் முயற்சியைப் பின்வலிக்கின்றனர். விரிக்கிற் பெருகுமென மச்சமேற்படுகின்றது.

அகத்திய முனிவருடைய வரலாரேவெனின் பெரும்பாலும் புராணங்களிற் ரேய்ந்தவை யாதலால் இங்குக் கூறிய அனைத்திலும் கலந்து தலைமை பெற்றிருக்கின்றதென்பது பிறகு தெள்ளிதின் வெளியாகும்.

> " வீங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்
> தாங்கா நல்லிசைத் தமிழ்க்கு விளக்காகென
> வானோ ரேத்தும் வாய்மொழிப் பல்புகழ்
> ஆனுப் பெருமை அகத்திய னென்னும்
> அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்."

தமிழிலக்கண நூல்களுக்கு முதனூலாதலாலும் இயலிசை நாடகமாகிய முத்தமிழிற்கும் தனித்தனிப் பிரித்து இலக்கணம் செய்வதற்கும் அகத்தியமே ஆதி நூலாயிருந்தாலும்,

> " மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
> தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன் "

என்றபடி தேவர் வேண்டுகோட்படி தென்திசை வந்து "தெய்வ மால்வரைத் திருமுனி" என்னுஞ் சிறப்புப் பெயர் பெற்றுத் தென்மொழிக்குச் சங்கங்க ளேற்படுத்தி யோங்கச் செய்தவரும், முதன் முதலில் ஆரியரை விந்திய மலைக்குத் தென்பால் குடியேற்றினவரும் அகத்திய முனிவரே. இம்முனிவர் தென்திசைக்கு வருமுன் அத்திசை பெரிய வனமாயிருந்தது. அங்குப்பல அரக்கர் வசித்து உயிர் வருக்க மனைத்திற்கும் இறுதி செய் தழித்துப் பாழ்படுத்தி வந்தன ரென்பது "அகத்தியர் தென் திசையை ஜயித்துக் குடியேற்றினது போல்" என வான்மீக முனிவர் கூறியவற்ருலும் பிறவாற்ருலும் விளங்கும். அவ்வின்னலை நீக்கிப் பலரைக் குடியேற்றித் தன்பெயரையே தென்திசைக்கு வைத்த வள்ளலைப்பற்றிய விவரங்களை அறிந்து அன்னுர்பாலன்பு செலுத்த வுரிமையுள்ளோம்.

189008

தற்போதைய அகத்திய வுலகத்தில் நூதனமுறையிலாராய்ச்சி செய்கின்றவர்கள் வடமொழி நூற்களிற் காணும் அகத்திய முனிவரும் தமிழ் நூல்கள்தந்த அகத்திய முனிவரும் வெவ்வேருவரென்றும்; வடமொழியகத்திய முனிவரே இமயத்திலிருந்து வந்தவரென்றும் தென்மொழி யகத்திய முனிவர் அக்காலத்தில் தென்திசையிலிருந்த மகேந்திர பர்வதத்திலிருந்தும் பொதிகைமலைக்கு வந்தவரென்றுங்கூறி அதற்கு இன்றியமையாத ஊகமான சான்றுகளும் காட்டி யிருக்கின்றனர். அவ்வாறு புகுந்தாராய்ந்தால் வேத அகத்தியர், புராண அகத்தியர், இதிகாச அகத்தியர், சரித்திர அகத்தியர், அயல்நாட்டகத்தியர் எனப் பல அகத்தியர்கள் தென்படலாம். இவ்வாறு கால வேறுபாட்டால் பல அகத்தியராயினரேயன்றி வேறல்ல. சிலவாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினரே பல பாஷைகளைக்கற்றுத் தேர்ந்திருக்கின்றதை யாம் கண்கூடாகக் காண்கின்ரேம். பலநாள் வரை ஆங்கிலமே தம் தாய்பாஷையாகக் கற்ற ஆங்கிலேயர் பலர் பிறகு தமிழ் ஸமஸ்கிருதம் முதலிய பிறபாஷைகளைக் கற்றுப் பாண்டித்திய மடைந்திருக்கின்ருர்கள். அங்ஙனமிருக்கப் பல்வாழ்நாட் பிணியிலிப் பேறிவுப் பெருந்தகையார் பல பாஷைகளைக் கற்றுத்தேராதிரா ரென்பது திண்ணம். ஈண்டிஃ தாராய்ச்சியின்று. அகத்திய முனிவரைப்பற்றிய அறிவுகளைத் தொகுத்த பிறகு நடுநிலையில் நின்று அவரொருவரா? என்பதும் பிறவும் தனியாக மறுமுறை ஆராயப்படும்,

ஒருவரின் வாழ்நாள் நிகழ்ச்சி யறிவதில் முதலில் அன்னுரின் பிறப்பை அறிந்து கொள்வதியற்கை. அவ்வாறு நோக்கினுல் அகத்திய முனிவரின் பிறப்பைத் திட்டமாக அறிய முடியவில்லை. ஒரு சாரார் இவரைப் பிரமனின் மானத புத்திரர் எழுவரில் ஒருவரென்று கூறியிருக்கின்றனர். சில நூல்களில் புலஸ்தியருக்கு அவிர்புக்கு வயிற்றிற் பிறந்தவரென்றும் இவர் தம்பி விசிரவசுவென்றும் கூறப்பட்டுள்ளது. இவ்விரண்டுங் கிடக்க நாரத முனிவரின் குமாரனென்றும் சிலர் கூறு வாராயினர். இம் மூன்றிலும் முன்னையதை நயபியபோதும் பின்னையவை மறுப்புக் கிடமாகின்றன. இவைகளைத் தவிர இருக்கு வேதத்தில அடியில் வருமாறு கூறப்பட்டுள்ளது. மிக்க தவஞ்செய்த மித்திராவருணர் கடற்கரையிலிருக்கும்போது ஊர்வசியென்னும் அப்சரகன்னி யங்கு வர, அவர்கள் அவளைக்கண்டு காமுற்றனர். அதன் பய

னாக அவர்கள் ரஜஸ முறையே கலசத்திலும் நீரிலும் விழுந்தது. அதனால் கலசத்திலிருந்து அகத்தியரும் நீரிலிருந்து வசிட்டரும் பிறந்தனர்.

மித்திரா வருணர்க்குப் பிறந்தமையால் மைத்திரா வருணியென்றும் கும்பத்தில் பிறந்தமையால் கடோத்பவன், கும்பசம்பவன், கும்பஜன்மன், கும்பயோனி, கும்பமுனி, குடமுனி என்னும் காரணப் பெயர்கள் வழங்கலாயின. முன் ஜன்மத்தில் இவருக்கு தஹராக்கினி அல்லது ஜாடராக்கினி யென்று பெயரெனப் பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது. உண்மை யெவ்வாறோ அறியேம்.

பெரும்பாலும் புராணங்களிற் கூறும் வரலாறுகள் தற்போதைய உண்மைக்கு முற்றும் மாறாகவே யமைந்துள்ளன. அவைகளைப் படிக்கும்போது அவ்வாறு நடந்திருக்குமோ வென்று ஐயங்கொள்ள இடமேற் படுகின்றது.

“ புனைந்துரை யுலகிய லெனுந்திற மிரண்டினும்
தொல்லியல் வழாமற் சொல்லவும் படுமே ”

என்றபடியும், தற்பொழுதைய தேசகால வர்த்தமானங்கட் கேற்பவும் நடந்த விஷயங்களை மறைத்துப் புலவர் சமயோசிதமாகக் கூறுவது இயற்கையாம். அம்முறையில் அம்முனிவர்கள் ஊர்வசிக்குப் பிறந்திருக்கவேண்டும். இதுபற்றியே இவர்க்கு ஔர்வசியர் என்ற பெயர் ஏற்பட்டது. அதை நூலாசிரியர்கள் சிறிது மறைத்துக் குறிப்பாகஉண்மை தெரியும்படி விளங்கவைத்து “இருடி மூல நதிமூல மறிதல் தகாது” என்றும் கூறிவைத்துவிட்டனர். பிற்காலத்தாரும் அதுவரையிலும் செலுத்தித் தங்களாராய்ச்சியை நிறுத்திக்கொண்டனர் என நவீன முறையாளர் கூறுகின்றனர்.

கள்ளி வயிற்றி னகிற்பிறக்கு மான்வயிற்றி
னொள்ளரி தாரம் பிறக்கும் நெடுங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார் யார்

என்றான்றோரே கூறி யிருக்கின்றனர். அம்முறையை நாமுங்கையாளுவதே முறையாகும்.

இவரது பயிற்சி விவரம் கர்ண பரம்பரையிலு முலவக் காணோம். ஆயின் கண்டதை வைத்தனுமானித்தாற் சொல்லத்தகுமன்று. தேவபாஷையைத் தெளிவாகக் கற்றுக் காமவெகுளி மயக்கமுதலிய நீங்கி, வேதங்களை யோதிப், பலகாலந் தவஞ்செய்து, ஜோதிப்பிழம்பாகிய பரம்பொருளைத் தன் னகக் கண்ணாற்கண்டு பரமானந்தமடையத்தக்கவராய்க் கடவுட்டன்மையே பிரதிபிம்பித்த ஸ்வானுபூதியாயினா ரென்பதற்குச் சிறிதும் ஐயமுறுவாருளரோ?

அகத்தியரென்ற பெயர்பெற்ற வரலாற்றை வான்மீகி முனிவர் “அகஸ்த்ய இதிவிக்யாதோ லோகேஸ்வேனைவகர்மணா” அதாவது ‘தன் சொந்தச் செய்கையினால் அகஸ்தியரென்று பெயர் பெற்றா’ ரென்று கூறுகிறார். தவிர குடிலமாகிய அகத்தைப் போக்கினமையால் அகத்தியரென்றும்; அகம் - கும்பம், கும்பத்தில் தோன்றினமையால் அகத்தியரென்றும், அகம் - நிலைத்திருப்பது, அதாவது விந்தியமலை, அம்மலையை யடக்கிய காரணத்தால் அகஸ்தியர் எனவும் பலர் பலவாறு அன்வயப்படுத்திப் பொருள் கூறியுள்ளார். ஆதலால் சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி கொள்ளத்தக்கது.

இம்முனிவர் உருவத்தில் குறுகியவராதலால்மாணியா, குறுமுனி என்னும் பெயர்கள் வழங்கப்பட்டார். இவர் இருக்கு வேதத்தில் 191-வது இருக்கு மந்திரத்திற்குக் கர்த்தாவாயிருக்கிறார். தனக்கு யாரோ விஷமிட்டதாகச் சந்தேகித்து இதையோதினாரென்று கூறுகின்றனர். தவிர ஸ்மிருதி சந்திரிகை, அகஸ்த்ய ஸம்ஹிதை, அகஸ்த்ய கீதை, பிரம்மபுராணம் முதலிய நூல்களும், அகஸ்த்ய சகலாதி காரமென்ற சிற்பநூலு மியற்றியிருப்பதோடு தனுர் வேதத்திலும் மிக்க தேர்ச்சி பெற்றிருந்தார்.

“ உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்
கச்சாணி யன்னா ருடைத்து ” [தேர்க்

என்றபடி இவர் உருவத்திற் குறுகியவராயினு தவத்துறை போகிய தனிப் பெருந்தகையார்க் கெல்லாம் தலைமைபெற்று விளங்கியது பற்றி,

“ உரனென்னுந் தோட்டியா லோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து ”

என்னும் மேற்கோளுக் கிலக்காகவு மாயினாரென்க.

இங்ஙன மொத்த அகத்தியமுனிவரின் அரும் பெருஞ் செய்கைகளையும் விரிந்த புகழ்ப் பெருமையுங் கூற அவரைப்போலொத்த முனிசிரேஷ்டர்களுக்கே பல நாள் வேண்டுமாயின் மற்றோர்க்கென்புகல்வது? ஒவ்வொரு ஆசிரியருங் கூறியவைகளைத் தொகுத்தாலும் அஃதோர் பெரிய நூலாகும். ஆதலால் ஈண்டுச் சில ஆசிரியர்களால் ஆங்காங்குக் கூறப்பட்டுள்ள பலவற்றிற் சிலவற்றின் சுருக்கத்தைக் குறிப்பாக எழுதுவோம்.

அகத்திய முனிவரின் அற்புதச் செயல்கள் ஒன்றல்ல; பெருமையுஞ் சிறிதளவல்ல. இவரே தேவ விருடியர்களில் முதன்மை பெற்றவரெனப் புராணங்கள் கூறா நிற்கும். இவரைப் புகழாத புராணமும், இதிகாசமும், தேவரும், முனிவரும் மனிதருமில்லை. நிலவுலகத் தரசனொருவன் குறைவற நூறு அசுவமேத யாகஞ் செய்தால் இந்திரனாவான் என்ற கொள்கைப்படி நிறைவேற்றியவனும் பிறகு அகத்திய முனிவரால் தகுதியுடையவனென்று ஒப்புக் கொள்ளப்படல் வேண்டும். அவன் அச்சமயத்தில் தவறின போதிலும் அப்பதவிக் குரிமையற்றவனாகின்றான். ஆதலால் நம்முனிவர் இந்திர பதவிக்குக் கட்டளைக் கல்லாயிருக்கின்றார்.

சான்றாக, சந்திரவம்சத்தில் புரூருவபுத்திரனை ஆயுவென்பவன் சுவாபாநவி என்பவளை யணந்து நகுடனைப் பெற்றான். நகுஷன் பிரியம்வதையை மணந்து யதி, யயாதி சம்பாதி, ஆயாதி, உத்தமன், என்ற குழந்தைகளைப்பெற்றான். இவன் தனக்கு இந்திரபதவி கிடைக்க வேண்டுமென்று நூறு அசுவமேதயாகஞ் செய்து அப்பதவியடைந்து புலோமசையை யுரிமையாக்கிக்கொள்ள நினைந்தான். பிறகு அவளனுமதிப்படி நகுடன் சப்த முனிவரைத்தன் சிவிகை தாங்கச்செய்து செல்லுங்கால் மோக மேலீட்டால்;

“ குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது ”

என்பதையறியாமல் முனிவர்களை நோக்கி விரைவைக் குறிக்க ஆரிய மொழியில் சர்ப்ப சர்ப்ப வென்றுகூறினான். சிவிகையின் முன்தண்டு தாங்கிச்செல்லுங் குறுமுனிவர் உடனே அதுபொறாமல் வெகுண்டு “நீ சர்ப்பமாதக” எனச் சபித்தனர். பிறகு அவன் தன்னறியாமைக்கு மிகவருந்தி முனிவர் பெருமானை வேண்ட அச்சாப நிவர்த்தியுங் கூறினர். தவிர,

இந்திரன் வியாழபகவானை மதியாமலிருந்ததாலவர் யாவருமறியாமல் மறைந்துறைந்தனர். பிறகுபுரந்தரன்பிரமதேவரின் சூழ்ச்சியால் திரிசிரனைக் குருவாகக்கொண்டு யாகஞ்செய்யலானான். திரிசிரன் தேவர்க்கெனப் பெயர் வைத்து அசுரர்க்கு நன்மைவிளையவேண்டுமென யாகஞ் செய்தான். இதையறிந்த சதமகன் திரிசிரனைக்கொன்றான். இச்செய்திகேட்ட திரிசிரன் தந்தையாரான துவட்டா ஓர் ஆபிசார யாகஞ்செய்து விருத்திராசுரனைத் தோற்றுவித்து இந்திரனுடன் பொருது கொன்று வெற்றிகொண்டு வா அனுப்பினான். இருவருக்கும் பயங்கரமான பல யுத்தங்கள் நடந்தன. இறுதியில் விருத்திரன் இந்திரனுடன் பொரச் சத்தியற்றுக் கடலிற் சென்றொளித்தான். பிறகு இந்திரன் பலவிடங்களிலும் அவனைத்தேடியுங் காணாமல் கடலில் ஒளிந்திருப்பதை நாரத முனிவராலறிந்து தேவர்களுடன் அகத்திய முனிவரிடம் வந்து கடலை வற்றச்செய்ய வேண்டுமெனக் குறையிரந்தான்.

“ பண்டவுணர் மூழ்கினர் படார்களென வானோர்
எண்டவ! எமக்கருள் கெனக்குறை யிரந்தார்
கண்டொருகை வாரினன் முகந்து கடலெல்லாம்
உண்டு; அவர்கள் பின்னுமிழ்க! என்றலு முமிழ்ந்
தான்.”

R. முத்தையர், திருநெல்வேலி.



# கம்பராமாயணம்

## பால காண்டம்

## 6. கையடைப் படலம்.

**ஓதுவர் முனிவர் கதையினைக் காட்டுவர் கம்பர்.**

வாங்கரும் பாதநான்கும் வகுத்த வான்மீகியினிடத்தில் கம்பருக்குக் கரையிலாப்பக்தி அமைந்திருந்ததெனினும், அம்முனிவரை இக்கவிஞர் முற்றிலும் பின்பற்ற இயலவில்லை. வான்மீகி முனிவர் இராமகதையை வசனவாயிலாய் ஓர் வரலாற்றினைக் கூறுகின்ற முறையிற் கூறிக்கொண்டு போவர். கம்பரோ நிகழ்ச்சிகளை நாடகரூபமாகக் காட்டிக் கொண்டுவருவர். கதையைச் சொல்கின்றவர் நிகழ்ந்த செய்திகளை மாத்திரம் அல்லாது அவை நிகழுமா வந்தவிதமும், நிகழ்த்துகின்ற பாத்திரங்களின் மனதில் உள்ள எண்ணங்களும் யாவும் வெளிப்படையாகக் கூறிக்கொண்டே வரவேண்டியவர்களா யிருக்கின்றனர். கம்பரது நூல் நாடகம் அல்லாவிடினும் நாடகத்திற்கு இயன்ற மனோபாவத்தால் பிறந்ததாகையால், நாடகமுறைக் கேற்பக் கவி தன் கதையோடு வெளிப்படையாகக் கலந்துகொள்ளாமல் பாத்திரங்களுக்குப்பின்னாக மறைந்து நின்று நிகழ்ச்சிகளை மாத்திரம் தொடர்ச்சியாய் இயக்கிக் காட்டுவாராகின்றனர். பாத்திரங்கள் வாயிலும் அவரவர் நினைப்பதத்தனையும் சொற்களாகத் தோன்றா. வாய்வந்த சொற்கள் ஒன்றிரண்டு கொண்டு நாம் அவர் தம் உள்ளக்கிடக்கையை ஊகித்துணரல் வேண்டும். மேலும், நாடகமுறையில் பாத்திரங்களுக்கு மாறாத்தன்மையும் அத்தன்மைக்கு இயற்கையாய வளர்ச்சியும் அமைத்தல்வேண்டும். பாத்திரங்கள் தம்முள் பொதுவாய சில தன்மைகளும் பெற்று நடந்தாலன்றி நாடகம் சுவையுடைத்தாகாது. கம்பருக்கும் வான்மீகி முனிவருக்கும் ஏற்றந்தாழ்வு எவ்விதத்திலும் கூறுதலமையாது. எனினும் கதைமுறை (Narrative Method) என்பதற்கும் நாடகமுறை (Dramatic Method) என்பதற்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டுதற்குக் கையடைப் படலத்திற் கண்ட இச்சிறு நிகழ்ச்சி ஏற்றதாய் அமைந்திருக்கின்றது.

அன்றன்று இரவிலே கம்பர் அந்தணரோடு வடமொழி இராமாயணத்தை ஆராய்ந்து, மறுநாள் அதன் பொருளை அமைத்துத் தமது நூலினைப் பாடிவந்தார் எனக் கூறுவது மரபு. ஆதலின் அவ்விராமாயணத்தின் ஒவ்வொரு சுலோகமும் இவர் நினைவில் இருக்கின்றபோதே இவரது பாசுரங்கள் உருப்பெற்று எழுகின்றன. எனின், முதல் நூலினின்று விடுத்தும் எடுத்தும் மாற்றியும் கம்பர் அமைத்துக்கொண்ட விதங்களை நுண்ணிதின் ஆராய்வது முன்சொன்ன கதைமுறைக்கும் நாடகமுறைக்கும் உள்ள வேறுபாட்டினைக் காட்டுதற்கு இன்றியமையா தாகின்றது. அவ்வாறு ஆராய்வதால் கம்பரின் மனோபாவத்தின் மேன்மையும் அம்மேன்மைக்கு ஆதாரமாயிருந்த வால்மீகி முனிவரின் பெருமையும் இனிதின் விளங்கும். இங்கு விளக்குதற்கு மேற்கொண்ட கருத்தைத் தொடர்ந்தறிவதற்கு வால்மீகி முனிவர் இப்பகுதியை எவ்வாறு உரைத்துளார் என்பதை முன்வைத்துப் பேசுதல் அவசியமாம். ஆதலின் வால்மீகி இராமாயணத்திற்குப் பண்டித நடேச சாஸ்திரியார் செய்துள மொழிபெயர்ப்பினின்று இப்பாகத்தை எடுத்து ஈண்டு எழுதுவோம் :—

“இவ்விதமான புத்திரர்களைத் தாம் அடைந்த சந்தோஷத்தை முற்றும் அனுபவிக்க, அவர்களுக்குத் தகுந்த பெண்களைப் பார்த்து விவாகம் பண்ணிவைக்கவேண்டுமென்று, தசரத மகாராஜர் தமது புரோகிதர்களோடும் பந்துக்களோடும் ஆலோசித்தனர். அவ்வாறு அவர் மந்திரிகள்சூழ ஆலோசித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் மிக்க தேஜசுள்ள விசுவாமித்திர மகாமுனிவர் தசரதரைக் காண விரும்பியவராய்த் தாமாகவே அரண்மனை வாசலில் வந்து, அவ்விடமிருந்த சேவகர்களை நோக்கிக் குசிககுலத்தவரும் காதி குமாரருமான தாம் வந்திருப்பதை உடனே உட்சென்று அரசரிடந் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னார். அதைக்கேட்டு அவர்கள் அச்சத்தோடு வெகு பரபரப்பாய் விரைந்தோடி அரண்மனையினுட்சென்று அரசர்முன் நின்று விசுவாமித்திரமா முனிவர் வந்திருப்பதை அறிவித்தார்கள்.

“அவர்கள் சொன்னதைக்கேட்டு அரசர் வெகு ஆனந்தத்துடன் தமது புரோகிதரையுங் கூட அழைத்துக்கொண்டு, பிரம்மதேவரைக்காண இந்திரன் போவதுபோல் எதிர்கொண்டுபோய், மிக்க காந்தியோடு விளங்கும் அம்முனிவரை வணங்கி வெகு மரியாதையுடனும், விசுவாசத்துடனும் வசிஷ்டர் மூலமாக அவருக்கு அர்க்கியங்கொடுத்தார். அவ்வாறு விதிப்படி கொடுக்கப்பட்ட அர்க்கியத்தை முனிவர் பெற்றுக்கொண்டு இராஜாவைப் பார்த்து அவருடைய க்ஷேமலாபங்களைக்குறித்து விசாரித்தார். நகரம், நாடு இவைகளின் க்ஷேமத்தையும், பொக்கிஷத்தின் விருத்தியையும், பந்துக்கள் சிநேகிதர்கள் இவர்களுடைய சௌக்கியத்தையும், முதலில் விசாரித்துப் பின்பு “ சிற்றரசர்கள் எல்லோரும் உமக்குள் அடங்கியிருக்கிறார்களா? நீர் உமது சத்துருக்களையெல்லாம் அடக்கிவிட்டீரா? நீர் செய்யவேண்டிய தேவகாரியங்கள், மநுஷ்ய காரியங்கள் இவைகளெல்லாம் சரிவர அநுஷ்டிக்கப்படுகின்றனவா?” என்று வினவினார். அதன்பின் அம்முனிவர் வசிஷ்டர் முதலான ரிஷிகளைப்பார்த்து அவர்களுடைய யோகக்ஷேமத்தை விசாரித்தார். அவ்விதமாய் வெகு மரியாதையுடன் தசரதமகாராஜாவினால் அழைக்கப்பட்டு விசுவாமித்திர முனிவர் வெகு சந்தோஷமாய் எல்லாருடனும் அரண்மனையில் நுழைந்து அங்குத் தமக்குத் தகுந்த ஆசனத்தில் வீற்றிருந்தார். அவருக்கு வேண்டிய உபசாரஞ் செய்துமுடித்து அரசர் அவரைப்பார்த்து வெகு ஆனந்தத்துடன் வணக்கமாய் “ முனிபுங்கவரே! இன்று நீர் இங்குவர நான் பெற்ற பாக்கியமானது அமிருதங் கிடைக்கப்பெற்றால் எவ்வண்ண மிருக்குமோ அவ்வண்ண மிருக்கின்றது; மழையில்லாமல் தவிக்கும் தேசத்தில் மிகுதியாக மழை பெய்தால் எவ்விதச் சந்

தோஷ முண்டாகுமோ அவ்விதச் சந்தோஷம் எனக்கு உண்டாயிருக்கின்றது; புத்திரபாக்கிய மில்லாதவனுக்குத் தனக்குச் சரியான மனைவியிடம் புத்திரோற்பத்தியானால் அவனுள்ளம் எப்படிக் களிக்குமோ அப்படி என் மனம் ஆனந்தமடைகிறது; பெரு கஷ்டமடைந்தவனுக்கு இலாபங் கிடைத்தால் எவ்விதமான திருப்தி உண்டாகுமோ அவ்விதமான திருப்தி எனக்கு உண்டாயிருக்கிறது. பெரிய உத்ஸவத்தால் எவ்விதமான சந்தோஷமுண்டாகுமோ அவ்விதமான சந்தோஷத்தை நான் அடைகிறேன்; உமக்கு எந்தக் காரியம் எந்த விதமாய் முடியவேண்டுமோ, அந்தக் காரியத்தை அந்த விதமாகவே நான் மகிழ்ச்சியோடு செய்துமுடிக்கக் காத்திருக்கிறேன். தானங்களைப் பெறுதற்கு உத்தம பாத்திரமானவர் நீர்தாம். எனது பாக்கிய விசேஷத்தாலேயே நீர் இங்குவந்தீர். இப்பொழுது உமது வரவால் என் ஜன்மம் ஸபலமாயிற்று. என்பிழைப்பும் நற்பிழைப்பாயிற்று. முதலில் ராஜரிஷியாயிருந்து பின்பு கடினமான தவம்புரிந்து பிரமரிஷிப்பட்டம் பெற்ற உம்மை நான் பலவிதமாகப் பூசிக்கவேண்டியவனு யிருக்கிறேன். நீர் இவ்விடம் வந்தது வெகு ஆச்சரியம். இன்று உம்மைத் தரிசித்தது ஒன்றே எனது பிறப்பை மிகவும் பரிசுத்தமாகப் பண்ணிவிட்டது. உமது வருகையால் இந்த க்ஷேத்திரம் புண்ணிய க்ஷேத்திரமாயிற்று. நீர் காரியம் எதையாவது உத்தேசித்து வந்திருந்தால் அதைச் சொல்லியருளவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். எவ்விதமாயாவது நான் உமக்கு ஊழியஞ்செய்ய அதிக ஆசையுடையவனுயிருக்கிறேன். நீர் சொன்ன காரியத்தை நான் செய்கிற விஷயத்தில் நீர் சிறிதும் சங்கிக்கவேண்டியதில்லை, நீரே எனக்குக் கடவுளாதலால் நீர் சொல்லும் வேலையையெல்லாம் செய்யச் சித்தனுய்க் காத்துக்கொண்டிருக்கிறேன். உமது வருகையே எனக்கு இன்று முதல் எல்லாவிதமான சம்பத்துக்களும் மிகச் சிறந்த தருமங்களும் வந்துவிட்டன என்பதற்கு அடையாளம்" என்ருர். இவ்வாறு மனத்துக்கும் காதுக்கும் சுகமாகவும் மனப்பூர்வமாகவும் அரசர் வணக்கத்தோடு சொன்ன சொல்லைக்கேட்டு, பெருங்கீர்த்திபெற்றவரும் மகாகுணசாலியுமான விசுவாமித்திர மகாரிஷி வெகு திருப்தியடைந்தார்.

"இவ்வாறு அரசர் அன்புடன் எல்லாரும் ஆச்சரியப்படும்படியாயும் அநேகபிரகாரமாயும் தம்மைப் பார்த்துச் சொன்னதை விசுவாமித்திரர்கேட்டு மகிழ்ந்து, பின்வருமாறு அரசரை நோக்கிச் சொல்லுகின்ருர்:—" இராஜசிங்கமே, உயர்ந்தகுலத்தில் உதித்து வசிஷ்டரைக் குருவாக அடைந்து விளங்கும் உமக்கேயல்லது உலகத்தில் வேறு மன்னவர்க்கு இவ்வகை உபசார வார்த்தைகள் சொல்லத்தெரியுமோ? நான் எதை உத்தேசித்து இங்கு வந்தேனே அதை இப்பொழுதே தெரிவிக்கின்றேன். அதைச் சத்திய சந்தரான நீர் நிறைவேற்றி வைக்கவேண்டும். நல்ல பேறுபெறும்பொருட்டு நான் ஒரு யாகம் ஆரம்பித்திருக்கிறேன்; அதற்கு விகாதஞ்செய்ய, மாயாரூபங்கொள்ள வல்ல மாரீசன், சுபாகு என்னும் இரண்டு ராக்ஷஸர்கள் தலைப்பட்டிருக்கிருர்கள். அவர்கள் வெகு பலபராக்கிரம முள்ளவர்கள். யாகமோ பெரும்பாலும் முடிவுபெறும்படியான நிலைமையிலிருக்கிறது. அவ்விருவரும் அதைக்கெடுக்க யாகபூமியில் கூடைகூடையாக மாம்சங்களையும், குடங்குடமாக இரத்தத்தையும் கொண்டுவந்து சொரிகிருர்கள். இவ்வண்ணமாக அவர்கள் என் யாகத்துக்கு இடையூறு செய்வதால் நான் பட்ட சிரமமெல்லாம் வீணுனதைப்பார்த்துக் குதூகலம் குன்றி என் ஆச்சிரமத்தை விட்டு வந்துவிட்டேன். யாகத்துக்குத் தீக்ஷைபண்ணிக்கொண் டிருக்கிறவன் கோபத்துக்கு இடங் கொடுக்கலாகாதென்பது விதியாகையால், கோபங்கொண்டு அவர்களைச் சபிக்க எனக்குப் புத்திவரவில்லை.

"இந்த விஷயத்தில் என்னைக்காக்க உமது மூத்த குமாரரான இராமனை உம்மைக்கேட்டு அழைத்துக்கொண்டுபோக வந்திருக்கிறேன். அவர் பக்கக் குடுமி வைத்துக்கொண்டிருக்கிற சிறு குழந்தை என்ருலும் ஒப்பற்ற சாமர்த்தியம் உடையவர். அவர் என்னால் பாதுகாக்கப்பட்டு என்னுடைய ஆச்சிரமம் சேர்ந்ததும், அந்த ராக்ஷஸர்களால் உண்டாகும் இடையூற்றைத் தமது திவ்விய தேஜோ மகிமையால் நீக்குவார் என்பது திண்ணம். இதன்மூலமாக அவருடைய பலவகையான மேன்மையும் கீர்த்தியும் மூன்று லோகங்களிலேயும் பரவப்போகின்றன. இந்த விஷயத்தை நிறைவேற்றுவதற்காக நான் அவருக்கு அநேகவிதமான அஸ்திர சஸ்திரங்களை அளிக்கும்படி நேரிடும். இராமர்முன்பு மாரீசன் சுபாகு என்னும் இரண்டு ராக்ஷஸர்களும் ஒருநிமிஷங்கூட நிற்கமாட்டார்கள். இராமரை யல்லது வேறுயாரும் அவர்களை வதைசெய்ய முடியாது. காலன் அவர்களை முன்னரே தனக்கு இரையாக இலக்குவைத்துவிட்டான். அவர்கள் இராமருக்கு எதிராகுந் தரமுடையரல்லர். குழந்தையாயிற்றே என்று நீர் மனம் கலங்கவேண்டாம். இராமர் என் ஆச்சிரமம் வந்ததும் அரக்கர்களிருவரும் மாண்டார்கள் என்பதாக நான் சொல்லுவதை நீர் நிச்சயமாய் நம்பும்.

"மகாத்துமாவும் சத்திய பராக்கிரமருமான இராமரை உண்மையாய் அறிந்தவன் நான் ஒருவன்; வசிஷ்டரொருவர்; மற்றும் தவம்புரிந்தவர்களும் இராமரை உள்ளபடி கண்டறிந்திருக்கிருர்கள். உலகத்தில் அழியாத பேரறமும் பெரும்புகழும் அடையவேண்டுமென்று உமக்கு இஷ்டமிருந்தால் உடனே இராமரை நீர் என்னுடன் அனுப்பவேண்டும். அரசரே, இதுவிஷயமாய் வேண்டுமானல் நீர் வசிஷ்டர் முதலான பெரியவர்களுடைய அபிப்பிராயத்தையும் கேட்கலாம்; அவர்கள் இராமரை என்னுடனனுப்பலாம் என்று சொன்னல் பிறகு உமக்கு என்ன ஆக்ஷேபம்? எனது யாகமோ பத்துநாளைக்காரியம். இல்லை என்று சொல்லாமல் இராமரை உடனே என்னுடன் அனுப்பவேண்டும். யாகத்துக்குரிய காலம் தவறிவிடாதபடி விரைவில் அனுப்பவேண்டும். சிறிய குழந்தையைப் பெரிய காரியத்தில் அனுப்புகின்ருேமே என்று உமது மனத்தில் கொஞ்சமேனும் வருத்தப்படவேண்டாம்" என்று இவ்விதமாய் அந்தத் தர்மாத்துமாவாகிய விசுவாமித்திர முனிவர் தசரதரைப் பார்த்துத் தமது காரியத்தின் பொருட்டும் உலகத்தின் நன்மையின் பொருட்டும் இராமரைத் தாம் அழைத்துக்கொண்டு போகவேண்டிச் சொல்லி முடித்தார். அவர் சொன்னவற்றை யெல்லாம் கேட்டுத் தசரதர் மிக்கச் சோகமும் பயமுமுற்று, தம் பிள்ளையின்மேல் தாம் வைத்திருந்த அதிக ஆசையால், மூர்ச்சையடைந்தார்.

"விசுவாமித்திரர் வாக்கியத்தைக் கேட்டுத் தசரதர் சிறிதுநேரம் ஒன்றுந் தெரியாதவராயிருந்து, பின்பு மூர்ச்சை தெளிந்தவுடன் முனிவரைப் பார்த்து "முனிபுங்கவரே, செந்தாமரைக் கண்ணனுன என் குழந்தை இராமனுக்கு இன்னும் பதினறு பிராயங்கூட ஆகவில்லையே. அவனை ராக்ஷஸர்கள் முன்னின்று போர்புரிய வல்லன் என்று நான் எவ்வாறு நினைக்கக்கூடும்? நானே அக்ஷௌஹிணிக் கணக்காயுள்ள சேனைக்குத் தலைவனுயிருக்கின்றேன். அப்படி நிறைந்த சேனையோடு நானே நேராக வந்து அவ்வரக்கர்களுடன் போரிடுகின்றேன். எனது போர்வீரர்களோ மிகச் சமர்த்தர்கள்; எல்லாவகை அஸ்திரப்பயிற்சியிலும் தேர்ந்தவர்கள்; வெகு பல பராக்கிரமசாலிகள்; ராக்ஷஸ சமூகத்தோடு போரிடத்தக்கவர்கள். இராமனைமாத்திரம்விட்டு அவர்கள் எல்லாரையும் அழைத்துக்கொண்டு வரும்படி எனக்குக் கட்டளையிட்டால் உடனே நான் புறப்பட்டு விடுகிறேன். நானே கையில் விற்பிடித்து யாகத்தைப் பாதுகாத்துக்கொண்டு நின்று எனது உயிருள்ளளவும் போர்புரிகிறேன். இராமனைமட்டும் அழைத்துப்போதல் தகாது. நானே நேர்நின்று உம்முடைய யாகம் இடையூறடையாத வண்ணம் நன்ருகப் பாதுகாத்துவிட்டுத் திரும்புகிறேன். இராமனை மாத்திரம் இங்கு விட்டருளுவீர். அவனே குழந்தை; ஆயுதப்பயிற்சி நன்ருக இன்னுங் கைவந்தவனல்லன்; அரக்கர்களுடையவும் தன்னுடையவும் பலாபலங்களைப் பகுத்தறியுந் திறமில்லாதவன்; அஸ்திரபலம் பொருந்தியவனல்லன்; இன்னும் அவன் போரையே கண்டறியான்; அவன் அரக்கர்கள் முன் நின்று சண்டையிட வல்லனு? அவர்கள் வெகு கபடமாக யுத்தம் பண்ணுகிறவர்களன்ருே! இராமனைப் பிரிந்து நான் ஒரு நிமிஷங்கூட என் பிராணனை வைத்திருக்கமாட்டேனே; ஆதலால், ஓ முனிரத்தினமே, என் குழந்தையை அழைத்துப் போகவேண்டாம்; முடியாது. அவனை அழைத்துக்கொண்டுதான் போகவேண்டுமென்பது உமது நிச்சயமானல், என்னையும் என்னுடைய சதுரங்கசைநியத்தையும் அவனேடு அழைத்துவர விடைகொடுத்தருள்வீர். எனக்கோ பிராயம் அறுபதினுயிரம் ஆய்விட்டது. இந்த வயதில் நான் எவ்வளவோ சிரமப்பட்டுப் புத்திர காமேஷ்டி பண்ணிப் பெற்ற பிள்ளை இவன். அதற்காகவாவது மனமிரங்கி அவனைவிட்டுவிடும். எனக்குக் குழந்தைகள் நால்வர்கள் இருந்தாலும் இராமனிடம் எனக்கு விருப்பம் அதிகமா யிருக்கிறது. அதன்பொருட்டாவது, தருமகுணங்களை யுடையவனும் மூத்தவனுமான அவனை அழைத்துப்போக வேண்டாம்.

"அவ்வரக்கர்கள் யாவர்? அவர்கள் எந்த ராக்ஷஸ வமிசத்தில் பிறந்தவர்கள்? அவர்கள் பல பராக்கிரமம் எப்படிப்பட்டது? அவர்களுக்கு உதவி செய்பவர் யாவர்? அவர்கள் உருவம் எவ்விதமா யிருக்கும்? எவ்வாறு அவர்களை இராமனைக்கொண்டு வதைக்க நீர் உத்தேசித்திருக்கிறீர்? நானுவது என் சைநியமாவது கபடமாக யுத்தம் பண்ணுகின்ற கொழுத்த கொடிய அவர்கள் முன்னின்று சண்டைசெய்து அவர்களை வதைசெய்யும் உபாயம் என்ன? இந்த விஷயங்களெல்லாவற்றையும் பற்றி விவரமாகச் சொல்லவேண்டும்" என்று தசரதர் கேட்டார்.

"அதற்கு விசுவாமித்திர முனிவர் "புலஸ்தியர் வமிசத்தில் பிறந்த இராவணன் என்னும் பெயருடைய ஒரு ராக்ஷஸனிருக்கின்ருன். அவன் பிரமதேவரிடம் பல வரங்கள் பெற்று அதிக பல பராக்கிரமசாலியாய் அநேக ராக்ஷசர்களுடைய உதவியுடன் மூன்று உலகங்களையும் எப்பொழுதும் தைரியமாய் எதிர்த்து மிகவும் உபத்திரவம் செய்துகொண்டு வருகின்ருன். அவன் குபேரனுடைய தம்பி, பெருந்தவமுள்ள விசிரவ முனிவருடைய பிள்ளை. அவன் தான் யாகங்களைக் கெடுக்க முயலுகிறவனுகக் காட்டிக் கொள்ளுகிறதில்லை. ஆனலும், அவனுடைய ஏவுதலால் சுபாகு, மாரீசன் என்ற கொடிய பராக்கிரமமுள்ள இரண்டு ராக்ஷஸர்கள் எப்பொழுதும் யாகத்தைக் கெடுப்பதிலேயே நோக்க முள்ளவர்களாக இருக்கின்ருர்கள்" என்ருர்.

"அதைக்கேட்ட தசரதர் திகைத்து "ஐயோ அந்த இராவணனுக்கு எதிரில்நின்று நான் போர்செய்யவல்லனல்லேன். என் சிறு குழந்தையிடம் நீர் மனமிரங்கவேண்டும். நீரே எனக்குத் தெய்வம்; நீரே எனக்குக் குரு; தேவர்கள், தானவர்கள், கந்தருவர்கள், யக்ஷர்கள், கருடர்கள், நாகர்கள் முதலிய பெயர்பெற்றவர்களும் அந்த இராவணன்முன் போரில் நிற்கமாட்டார்களே; மனிதர்கள் எவ்வாறு எதிர் நிற்பார்கள்? அவனே வீரர்களுக்குள் வீரனையும் ஒருநொடியில் வெல்லவல்லவன். அவனுடனுவது, அவன் சைநியத்துடனுவது போர் செய்ய என்னால் முடியாது. மாமுனிவரே, என் குழந்தைகளையோ அல்லது என் சைநியங்களையோ அழைத்துக்கொண்டு சென்ருலும் என்னசெய்ய முடியும்? தேவர்களுக் கொப்பானவனும், போர் என்பதை இன்னுமறியாதவனுமான என் குழந்தையைக் கொடேன். சுந்தன், உபசுந்தன் என்றவர்களுடைய குமாரர்களன்ருே உமது யாகத்தைக்கெடுக்க எத்தனித்திருக்கிருர்கள்; அவர்கள் யுத்தத்தில் யமன் போன்றவர்கள்; பலத்திலும் ஆயுதப் பயிற்சியிலும் சிறந்தவர்கள். நான் ஒருபொழுதும் என்பிள்ளையை அனுப்பேன். ஆனல், அவ்விருவரில் ஒருவனுடன் போர்புரிய நானும் என் சைநியமும் வருகின்ருேம். அதற்கு நீர் எப்படியாவது இசையவேண்டும். நான் இரந்து கேட்டுக்கொள்ளுகின்றேன்" என்ருர்.

"இவ்வாறு தசரதர் சொல்லச்சொல்ல விசுவாமித்திர மாமுனிவருக்குக் கோபம் பொங்கி யாகத்தில் நன்ருக நெய்விடப்பட்டுத் தாவும் ஓமத்தீப்போலக் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது.

"புத்திர வாஞ்சையால்' தசரதர் இவ்விதமாய் வெகு மநோவியாகுலத்துடன் குழறிக்கொண்டு சொன்ன சொல்லை விசுவாமித்திரர் கேட்டுக் கோபாவேசங் கொண்டு வேந்தரைப்பார்த்து "நான் கேட்டதைத் தப்பாமல் கொடுப்பதாய் முதலில் சொல்லிவிட்டு இப்பொழுது இப்படித் தவறிச்சொல்லுகிறது உமக்குத் தருமமன்று. இது இரகுவமிசத் தரசர்கள் கொண்ட நோன்புக்கே விரோதமான காரியம். இப்படிச் சொல்வது உமக்குத் தகுதியாகுமானல் நான் வந்த வழியே திரும்பிச்செல்லுகிறேன். சொன்னசொல் தவறின நீர் தாமே பந்துக்களோடு சுகமாக வாழும்" என்று கூறினர். அப்பொழுது அவருக்கு உண்டான கோபத்தைப் பார்த்துப் பூமி முழுவதும் நடுங்கிற்று; தேவர்கள் எல்லாரும் அஞ்சினர்கள். இப்படி உலக முழுவதும் மிகவும் அஞ்சி நடுங்கியதை முக்காலங்களையுமறிந்த தைரியசாலியான வசிஷ்டமாமுனிவர் பார்த்துத் தசரதரை நோக்கி "மகாராஜாவே, நீரோ இக்ஷ்வாகு வமிசத்தில் பிறந்த இரண்டாவது தருமதேவதை போல விளங்குகின்றீர்; மநோதைரியத்தையும், நல்லநோன்பையும் கைப்பற்றியிருக்கும் நீர் உமது குலாசாரத்தை இப்பொழுது விட்டுவிடுவது நியாயமன்று. நீர் தருமாத்துமா என்பது மூவுலகமும் பரவியிருக்கிறது; ஆகையால் உமது குலதருமத்தைக் கைப்பற்றும்; தருமம் தவறி நடப்பது உமக்கு நியாயமன்று. "இன்னபடி நடக்கிறேன்" என்று வாக்குக் கொடுத்தால் அதற்கேற்றபடி நடக்கவே வேண்டும். அப்படி நடவாத பக்ஷத்தில், செய்த தருமங்களெல்லாம் பலனில்லாதனவாம். ஆதலால் இராமனை அனுப்பும். அஸ்திர சஸ்திர வித்தைகளில் இராமன் தேர்ந்தவனுனலும் இல்லை என்ருலும் விசுவாமித்திரருடைய பாதுகாப்பி லிருக்கிறவரையில் அவனை ஒருவராலும் ஒன்றுஞ் செய்யமுடியாது; அக்கினிசக்கரம் அமிருதத்தைக் காப்பதுபோல விசுவாமித்திரர் இராமனைக் காக்கும்பொழுது அரக்கர்கள் அவனை என்ன செய்யமுடியும்?

"இம்முனிவரோ தருமதேவதையே உருவெடுத்து வந்ததுபோலிருக்கின்ருர்; பராக்கிரமசாலிகளுக்குள் உத்தமர். புத்தியில் இவருக்கு மேற்பட்டவர் இவ்வுல



189008

சத்திலே இல்லை. தவத்திற்கு இவரே இருப்பிடம். எல்லாவித அஸ்திர சஸ்திரங்களையும் இவர் நன்றாய்க் கற்றுணர்ந்ததுபோல ஒருவரும் இதுவரையில் இம் மூவுலகத்திலும் அறிந்ததில்லை; அறியப்போகிறதுமில்லை. தேவர், முனிவர், அசுரர், ராக்ஷஸர், கந்தருவர், யக்ஷர், கின்னரர், உரகர் முதலிய யாவரும் இவரறிந்த அஸ்திரங்களை அறியவே மாட்டார்கள். எல்லா அஸ்திரங்களும் பிருசாசுவ முனிவருடைய குமாரர்கள்; விசுவாமித்திரர் முன்பு அரசாண்டு வந்தகாலத்தில் அந்த அஸ்திரங்களையெல்லாம் பிருசாசுவர் விசுவாமித்திரருக்குக் கொடுத்தருள, அவர் அவற்றை இராச்சியத்தைப்போலவே பரிபாலித்து வருகிறார். அந்தப் பிருசாசுவருடைய குமாரர்கள் தக்ஷருடைய குமாரிகளிடமிருந்து பிறந்தவர்கள்; அவர்கள் பலவகை உருவமும் அதிகபலமும் ஒளியும் ஜயமும் அமைந்தவர்கள். தக்ஷருடைய கன்னிகைகளான அழகிய ஜயை என்பவளும் ஸுப்பிரபை என்பவளும் அதிக ஒளிபொருந்திய நூறு அஸ்திர சாஸ்திரங்களைப் பெற்றார்கள். முன்பு அசுர சேனையை நாசம்பண்ணும் பொருட்டு, அளவிடக்கூடாத வல்லமை யுள்ளவர்களும் தங்களுக்கு இஷ்டமான உருவங் கொள்ளக்கூடியவர்களுமான ஐம்பது பிள்ளைகளை ஜயையென்பவள் பெற்றாள். பின்பு ஸுப்பிரபை என்பவளும் ஒருவராலும் தகைய முடியாதவர்களும் எங்கும் பழுதுபடாதவர்களும் வெகுபலசாலிகளும் ஸம்ஹாரர்கள் என்று பெயருள்ளவர்களுமான ஐம்பது பிள்ளைகளைப் பெற்றாள். இவ்விசுவாமித்திரர் அந்த அஸ்திரங்களையெல்லாம் அறிந்திருக்கின்றார். அவ்வளவேயன்றித் தாமே புதிதாக அநேக அஸ்திரங்களையும் உண்டாக்க வல்லவர். இவருக்குத் தெரியாத விஷயம் ஒன்றுமில்லை. ஆகையால், இராமன் அவருடன் புறப்பட்டுப் போவதில் கொஞ்சமேனும் உமக்கு அச்சம் வேண்டாம். அரக்கர்களைத் தாமாகவே கொல்ல விசுவாமித்திரரால் முடியும் என்பது உமக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்கட்டும். இவர் இப்பொழுது உம்மை அடைந்து இராமனை யாசிப்பதெல்லாம் இராமனுடைய நன்மைக்காகவேயல்லாது வேறன்று" என்று வசிஷ்டர் சொல்லத் தமது மனக்கலக்கம் நீங்கினவராய்த் தசரதர் அதிக சந்தோஷமடைந்து, விசுவாமித்திரருடன் தமது குமாரரைப் பயமில்லாமல் அனுப்பலாம் என்று நிச்சயித்தார்."

T. N. சேஷாசலம்.

# பழமுதிர்சோலை.

## 9999999

'எண்ணித் துணிக கருமம்' என நம் திருவள்ளுவ வள்ளலார் வழங்கிய வாசகத்தின் மெய்ப்பொருள் யாதென நினைக்கின்றீர் நண்பர்காள். நீங்கள் சிறுவயதில்படித்த புத்தகங்களில் சில இக்குறளிற் குறைத்த கருத்தையும் இந்நீதிக்கு உதாரணமாய் எடுத்துக்காட்டிய கதைகளையும் நம்பன்மின். பெரும்பான்மை அவை பொருத்தமில்லாதன. ஒரு கருமத்தைச் செய்தல்வேண்டும் என நிச்சயித்துப் பிறகு அது செய்ய நினைப்பவன் தனக்குள ஆற்றலையும் ஆற்றுங்கால் அதற்கு எய்துதற்கொத்த இடையூறுகளையும் சீர்தூக்கிப்பின் அக்காரியத்தைக் கைக்கொள்வதே அறிவென்றும் இவ்வறிவிலாதவன் துணியாது 'பின்பார்ப்போம்' என்று மேற்கொண்ட கருமத்தால் இன்னல் பட்டுழலுவான் என்றும் விரித்துரை கூறுவார், ஐந்தாம்பாட வாசக ஆசிரியர்.

காரிய சாத்தியமான கருமங்களையே ஒருவன் மேற்கொள்ள வேண்டுமென்னும் இச்சூழ்ச்சி பஞ்சதந்திரப் பாதகம். 'நினைத்தவோர் கருமத்தால் எத்தகை எத்துணைப்பயன் உளது' என்னும் ஒன்றினையே எண்ணித் துணிதல் வேண்டுமே யல்லாது அதனை முற்றுவிக்கும் ஆற்றல் தமக்கு உளதோ இல்லையோ வென்றென்று சிந்தனை எய்தித்தாழல் விதியன்று, வீரமன்று, பெருமையுமன்று. தன்னுலியலாத கருமத்திற் றலைநின்று தோற்றான் ஒருவனைச் சிலர் 'மனப்பால் பருகிய மதியிலி இவன்' என எள்ளுவர். கருதிய பயன் பெரியதாயின், முயற்சி முற்றிலதேனும் அவனே பெரியன். சிறுமானுடரால் எள்ளப்படுவதே ஒருவன் பெருமகன் என்பதற்கறிகுறி. சிறியர் யாவரெனின் அவரவர்க்கு ஏற்ற அளவு முடிக்கவல்ல காரியங்களைச் செய்பவர். இயலாத கருமத்தை முயன்றுபார்த்து முற்றுறாது போவாரே பெரியர். நண்பர்காள், ஒரு கருமம் எத்துணைப் பெரியதேனும், அதனைச்செய்து முடிக்க முயல்கின்றவரையில் ஒருவன் பெரியவனாயிருந்து வருவானேயன்றி, அது நிறைவேறியதாயின் அன்றே அவன் பெருமையழிந்து சிறியவனாகி விடுகின்றான். ஏனெனில், அக்கருமம் செய்து முற்றியதென்னின் அவன் முற்றவல்ல வொன்றினையே முயன்றான் என்பது வெளிப்படை. ஆயின் அது அவனால் செய்வதற்கு இயன்றதோர் கருமம். இயன்றதை இயற்றுவது சிறியனின் இலக்கணம்.

உலகம் மலைய இஃதின்குரைத்தோம் என மித்திரர்காள், மதியன்மின். திருக்குறளின் சொல்நுட்பம் தெளிதற்கு அவாவுவீராயின் அப்பெருந்தகை உலோவார். பெரியோர்க்குஞ் சிறியோர்க்கு முளதாய மூலபேதத்தை நம் மொருதனி நாயனார் எடுத்துக் காட்டிய ஈரடிச்செய்யுளிது:—

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

மற்றென்! ஆற்றுதற் கியலாததொன்றே அருமையாம். "தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது" என்னுமிடத்தில் 'அரிது' என்பதற்கு 'இயலாமை' அன்றிக் 'கஷ்டசாத்தியம்' என்னும் பொருள் பொருந்தாதெனல் நன்கு புலப்படும். இனிச் 'செய்வார்', 'செய்கலாதார்' என்பன இறந்த காலத்தில் இல்லாமையும் கருத்துட் கொண்டால் நண்பர்காள்! முன்னிங்குக் கண்டபொருளன்றி இக்குறட்கு வேறொன்று பொருளுளதோ! செய்து முடிக்க இயலாதனவற்றை முயன்று வருபவர் பெரியர். சிறியவர் செய்து முடிக்க இயலாதென்று முயற்சி செய்யாதிருப்பவர். பெருமையும் சிறுமையும் முற்றுற முடித்தலில் உளவெனின், "செயற்கரிய செய்தார் பெரியர் சிறியர் செயற்கரிய செய்திலாதார்" என்றோதுந் திறமையும் திருவள்ளுவர்க் குளது.

முற்றிய அளவளவெனுந் தகைமைத்தன்று வெற்றியுந் தோல்வியும் என்றே வள்ளுவரிங்கு விளம்பிய வாசகத்திற் கோராங்கில எதிரொலி, அன்பர்காள், நும்செவி எய்தியதாயின் பின்னும் மகிழீரோ. இலக்கணியின் ஈமத்தில் (Robert Browing's "Grammarians" Funeral) வள்ளுவர் ஒருகுறள் மொழிபெயர்ந்து வந்ததோ எனும்படி வந்துள வாக்கிய மிதுதனைக் கேண்மின்:—

"That low man seeks a little thing to do
 Sees it and does it;
This high man, with a great thing to pursue,
 Dies ere he knows it.
That low man goes on adding one to one,
 His hundred's soon hit;
This high man, aiming at a million,
 Misses an unit."

[அக்கீழ்மையன் சிறியதொன்று செய்யத் தேடிக் கண்டன்ன் செய்துவிட்டான். இம்மேலவன், பெரியதொன்றைப் பின்பற்றக் கொண்டனனும் அதனை அறியு முன்னரே மறித்துவிடுகின்றான். அக்கீழ்மையன் ஒன்று ஒன்றாகக் கூட்டிக்கொண்டுபோக, அவனே கருதியநூறு கடிதின் எட்டிவிடுகின்றது. இம்மேலவன் கோடியில் குறிவைத்து எண்ணொன்று தவறுவானாகின்றான்.]

"சபரி"



A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

சுகாமிர்தம்.

வக்கீல்கள், மாணவர்கள், உபாத்தியாயர்கள், கிளார்க்குமார் போன்ற மூளைவேலை செய்கின்றவர்களும் பிற நோய்களால் வருத்தப்படுபவர்களும் ரஸாயன ஔஷதங்களைச் சாப்பிடத்தேவையில்லை. மிகவும் இன்றியமையாத ஔஷதம் இது. பல மூலிகைகளைக்கொண்டும், அயம், காந்தம் இவைகளைக்கொண்டும் செய்யப்பட்டுள்ளது.

1-புட்டி 48-வேளை மருந்து ரூபா 3 0 0

கீழ்காணும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

Bhishakwara,

A. KANAKARATNAM A. M. A. C.

Late Hony. Medical Officer & Anatomy Assistant,

Govt. School of Indian Medicine.

Ayurvedalayam,

1/24 Arunachala Naick St., Chintadripet, Madras.

ஆநந்த குணபோதினி

மூன்றும் வருடம்

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவந்ததில்லை. இது சிறந்த வழியில் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை. 5000 சந்தாதாரர்கள்.

வருட சந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-4.

"ஆநந்த குணபோதினி" ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

9-ம் பதிப்பு! 9-ம் பதிப்பு!!

வெளி வந்துவிட்டது

ஆங்கில ஆசான்



தமிழ் நாட்டில் சுமார் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொடுத்ததும், முதன் முதல் வெளிவந்ததும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் இதுவே. எமது இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட் மார்க் இருக்கிறதாவென்று கவனித்துப் புத்தகம் வாங்குங்கள்.

800-பக்கம்

முழு காலிகோ பயிண்டு

விலை ரூ. 2-0-0.

தபால் சார்ஜ் பிரத்யேகம்

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலைத் தெரு, சென்னை.

## கம்பராமாயணம்
## பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெருது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.



## ஏமாங்கதத்
## திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி சார்ஜ் வேறு.)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.



# KAMBAN'S KOSALA
## or
## A Poet's Plea for Culture
### by T. N. Seshachalam B.A., B.L., In English

**A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.**

### With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.




# வர்த்தமானம்

**பர்டோலி நிதி:**—பர்டோலி சத்தியாக்ரஹ நிதிக் காக ஸ்ரீ மணிலால் கோதாரி பம்பாயில் பணம்வசூலித்து வருகிறார். இம்மாதம் 16உ வரையில் ரூ. 15,000 வசூலாகி யிருக்கிறது. பம்பாய் மாஜி அட்வொட்கெட் ஜனரலான பி. ஜே. தேசாய், பர்டோலி சத்யாக்ரஹிகளின் மீது அனுதாபம் கொண்டு ரூ. 5,000 கொடுத்துள்ளார்.

***

**முசிரியில் தீவிபத்து:**-இம்மாதம் 10உ யில் முசிரியில் ஏற்பட்டதீ விபத்தைப்பற்றிச் சில விபரங்கள் கிடைத் திருக்கின்றன. சுமார் 250 வீடுகள் எறிந்து போய்விட் டனவென்றும், ஒருவர் இறந்துவிட்டதாகவும், அநேகர் பலத்த காயமடைந்தனர் எனவும் தெரியவருகிறது. இத னால் அனேகர் வீடுஇல்லாமல் தவிக்கின்றனராம். கஷ்ட நிவாரண ஏற்பாடுகள் நடக்கின்றனவாம்.

***

**மதுவிலக்குப்பிரசாரம்:**—பாபநாசம் தாலுக்காவில் காங்கிரஸ்தொண்டர்கள் மதுவிலக்குப்பிரசாரமும் கதர்ப் பிரசாரமும்செய்வதற்குரிய முயற்சிகளைச்செய்துகொண் டிருக்கின்றனர். அதற்குச் சிலகிராமங்கள் பொருக்கிஎடுக் கப் பட்டிருக்கின்றன. காவிரிக்குத் தென் கிழக்கிலுள்ள கிராமங்களில் முதலில் மதுவிலக்கும் பிரசாரம் நடை பெறும்.

***

**ஐவர் மாண்டனர்:**—சென்னையில் பிராட்வேயிக்கு அருகிலுள்ள கார்ப்பொரேஷன் வடிகால் தொழிற்சாலை யில் 16-ந் தேதி காலையில் ஒருவிபத்து நிகழ்ந்தது. வடி காலுக்குள் இறங்கிய இரண்டு தொழிலாளர் ஏதோ விஷப்புகை வடிகாலினின்று எழ மூர்ச்சையடைந்தனர். அவர்களைக் காப்பாற்றச் சென்ற வேறு மூவர்கதியும் அதே ஆயிற்று. ஐவரும் மாண்டுபோயினர்.

***

**சேலம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி:**—சேலம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி அறிவிக்கி றார்:—இம்மாதம் 25ந்தேதி மேற்படிக் கமிட்டியின் கூட்டம் ஒன்று நடைபெறும்; கிராமாந்திரங்களில் கிரா மப் பிரசாரம் செய்யவும், காங்கிரஸிற்கு அங்கத்தினர் கள் சேர்க்கவும், சைமன் பகிஷ்கார வேலை செய்யவும் அக்கூட்டத்தில் ஏற்பாடு செய்யப்படும். மே மாதத்து வரவுசெலவுக் கணக்கும் அச்சமயம் கூட்டத்தின் அங்கீகா ரத்திற்கு விடப்படும்.

***

**சிந்துவைப் பிரிக்கமுயற்சி**—சில மாதங்களுக்கு முன் கூடிய சர்வகட்சி மஹாநாட்டார் சிந்துவைப் பிரித்து விடுவிதா அல்லது இப்பொழுது இருப்பது போல் ஒன்றாகவேயிருப்பதா நல்லது என்று நிர்ண யிக்கும்பொருட்டுக் கமிட்டி ஒன்றை நியமித்தினர். அக்கமிட்டியின் அங்கத்தினரான ஸ்ரீமான் ஈச்வரதாஸ், பண்டிதர் மோத்திலால் நேருவுக்கும், சர்தார் மங்களசிங் என்னும் சீக்கியப் பிரமுகருக்கும் விடுத்துள்ள தந்தி வருமாறு:—நான் நீரயோசித்தே முடிவுக்கு வந்தேன். பிரிவினையால் வரவு செலவுதிட்டத்தில் 10 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும். இது ஜனங்களின் நன்மைக் கானதல்ல. ஆகவே பிரிவினை கூடாது.

***

**நேருவுக்கு நவநகர் மன்னர் பதில்:**—பிரிட்டிஷ் இந்தியக் குடிகளின் முன்னேற்றத்திற்குத் தடையாய் இந்தியச் சுதேசமன்னர்கள் இருந்து வருகின்றனர் என்று பண்டிதர் நேரு அகில இந்தியக் கூட்டத்தில் கூறியுள்ளார். அது விஷயமாய் நவநகர் மன்னரான ஜாம்சாஹிப் ராய்ட்டர் நிருபரிடம் கூறியதாவது:— பிரிட்டிஷ் இந்தியக்குடிகளின் நியாயமான விருப்பத் திற்கு விரோதமாய்ச் சுதேசமன்னர் இருக்கிறார்கள் என்னும் கூற்றை நான் மறுக்கிறேன். சுதேச மன்னர்க ளது சௌகரியத்தையும் கவனியாது பிரிட்டிஷார் இந் திய ஜனங்களுக்குப் பலகாரியங்களைச் செய்துவைக் கின்றனர். சுதேச மன்னர்களும் தங்களது சௌகரியங் களைக் கவனிக்க வேண்டாமா?

***

**டில்லியில் இந்துக்கள் கூட்டம்:**—டில்லிக்கு அரு காமையிலுள்ள சாப்தாலா என்னுமிடத்தில் நிகழ்ந்த பக் ரீத் கலகத்தில் அதிகாரிகள் இந்துக்களைச் சுட்டுக் கொன்றதைக் கண்டனம் செய்வதற்கென ஹிந்து சமு கத்தினரின் கூட்டமொன்று டில்லியில் பண்டிதர் இந்தி ராவின் தலைமையில் இம்மாதம் 15-ந் தேதியன்று கூடிற்று. அக்கூட்டத்தில் தேசபந்து குப்தா பேசுகை யில் பசுவதை நிற்கவேண்டும் என்றும் இல்லையேல் நாட்டினில் அமைதி காணுதல் கடினம் என்றும், அதி காரிகளின் பீரங்கிகள் சமாதானத்தைத் தந்து விடா வென்றும் கூறினார். பண்டிதர் இந்திரா தமது அக்கிரா சனப் பிரசங்கத்தில் பசுவதையை நிறுத்தவேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டினார்.

***

**கல்கத்தா காங்கிரஸ்:**—கல்கத்தாவில் கூடப்போ கும் காங்கிரசில் நடக்கப்போகும் கண்காட்சியைப் பற்றிக் கண்காட்சிக் கமிட்டிக் காரியதரிசி ஸ்ரீ. நளின ரஞ்சனசர்க்காரைக் கேட்ட பொழுது, அவர் பின்வரு மாறுகூறுகிறார்:—இந்தியாவில் உற்பத்தியாகும்எல்லாச் சாமான்களும் கண்காட்சியில் சேர்க்கப்படும். நெசவுத் தொழிலில் கதருக்குத்தான் அதிகச் செல்வாக்கு கொடுக் கப்படும். இந்திய தேசக்கைத்தெழிலில் முன்னேற்றத் திற்கு அத்யாவசியமான சில மேல்நாட்டு ஆயுதங்களைத் தவிர, வேறுஎந்த அந்நிய தேசத்துச் சரக்குகளும் இக்கண் காட்சியில் வைக்கப்படா. சர்க்கார் விவசாய இலாக்காக் கைத்தொழில்களில் செய்யப்படும் சுதேச சரக்குகளுக்குக்காட்சியில் இடமுண்டு. சிறிய மூலதனம் கொண்டு செய்யக்கூடிய தொழில்கள் ஜனங்களுக்குச் செய்து காட்டப்படும்.

***

**மரணம்:**—ஐக்கியமாகாணத்து கவர்னரான ஸர். மூட் டிமன் திங்கட்கிழமையன்று இறந்துபோனார். ஐக்கோர்ட் டுக் கார்யாலாயத்தில் உயர்பதவி வகித்த ஸ்ரீ செங்கல்வ ராயர் சில தினங்களுக்கு முன் காலஞ்சென்றார்.

***

**சிவாஜி உருவச்சிலை:**—ஜூன்மாதம் 16-ந் தேதி யன்று சிவாஜியின் உருவச்சிலை பம்பாய் கவர்னரால் பூனாவில் திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்பு வைப வத்திற்குக் கோலாப்பூர் மஹாராஜாவும் பண்டிதர் மாள வியா, கெல்கார், ஜெயகர் முதலான பிரமுகர்களும், இந்தூர், குவாலியர், பரோடா சமஸ்தானங்களின் பிரதி நிதிகளும் வந்திருந்தனர். வேல்ஸ் இளவரசரும், ராஜப் பிரதி நிதியும், கமாண்டரும், கல்கத்தா, சென்னை கவர் னர்களும் அனுதாபச் செய்தி அனுப்பிவைத்தனர். இச் சிலையின் நிறை 10 டன். 117 அடி உயரமுள்ள கல்லில் 18 அடி உயரமுள்ள இச்சிலை நிறுத்தப்பட்டுள்ளது. இதைச் செய்துமுடிக்க 70000 ரூபாய் செலவாம். கவர் னரும், கோலாப்பூர் மஹாராஜாவும் சிவாஜியின் பெரு மையைப் பற்றிக் கூறினர்.

# THOUGHTS FOR STATESMEN

from

## MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

## T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

## Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "**KALANILAYAM**"

**11, Vellala Street, Purasawalkum, Madras.**



# Dr. Orison Swett Marden's World-Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for; To succeed in your chosen calling; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

### GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers—Diverted by salary—Mere money-making is not success.

### RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

### SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

### HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty.

### PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence—Health-building during sleep—Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

### EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease—Killing emotions—Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

### THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master—Trifles—Courage—Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

### THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement—The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

**Special Indian Edition Rupee 1-8-0 each**

## V. KALYANARAM IYER & Co.,

BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)